மௌன தவமுனிவர்

# கைலாசபதி

# வாழ்வும் சிந்தனையும்

(திருத்திய இரண்டாம் பதிப்பு)

வாழிய நின் மலரடிகள்! மௌன தவ முனிவ!
மனமிரங்கி அருள் புரிந்(து) ஓர்வார்த்தை எனக்கீயில்
பாழடவி யிதிற் சுழன்று பாதை விடுத்(து) லயும்
பாவியொருவனை அளித்த பலனுறுவை பெரிதே.

அளவெட்டி, யாழ்ப்பாணம் - 2012

பொ. கை. கிருஷ்ணராஜ

While Augustine thinks philosophy (354-430) Aegara important, its role is secondary to religious revelation. Where philosophy of faith fit in with Christian dogma, it is philosophy that must change

மௌன தவமுனிவர்
கைலாசபதி

# வாழ்வும் சிந்தனையும்

(திருத்திய இரண்டாம் பதிப்பு)

வாழிய நின் மலரடிகள்! மௌன தவ முனிவ!
மனமிரங்கி அருள் புரிந் (து ) ஓர்வார்த்தை எனக்கீயில்
பாழடவி யிதிற் சுழன்று பாதை விடுத் (து) லயும்
பாவியொருவனை அளித்த பலனுறுவை பெரிதே

அளவெட்டி,
யாழ்ப்பாணம்.
2012

முதற் பதிப்பு : ஜூன் 9, 2001 99 ஆம் பிறந்த தினம்

(C) சுந்தரலிங்கம் கைலாசபதி

ISBN 955 8058 01 7.

இரண்டாம் பதிப்பு: ஏப்பிரல் 14, 2012

(C) பொ. கைலாசபதி நூற்றாண்டு விழாக் குழு

56/5, கலட்டி அம்மன் வீதி,

யாழ்ப்பாணம்

அச்சுப் பதிவு : பாரதி பதிப்பகம்,

யாழ்ப்பாணம்.

# சமர்ப்பணம்
# சாதகர்க்கு

அத்தாவுன்னடியேனையன் பாலார்த்தா
யருணோக்கிற்றீர்த்த நீராட்டிக்கொண்டாய்
எத்தனையுமரியை நீயெளியாயானா
யெனையாண்டு கொண்டிரங்கியேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேனாயேன்
பிழைத்தனகளெத்தனையும் பொறுத்தாயன்றே
இத்தனையுமெம் பரமோவையவையோ
வெம்பெருமான்றிருக் கருணையிருந்தவாறே.

ச. பரநிருபசிங்கம் 11.08.1992 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக கல்விசார் அவையில் (Academic Form) பேசிய ஆய்வுரையின் தொடக்கத்தில் வரும் திருத்தாண்டகம். "குருவே சிவம் எனக் கூறினன் நந்தி" என்றபடி தமது குருவை தாண்டக வேந்தரின் சொற்களால் வழிபட்டார் எனலாம்.

# பொ. கைலாசபதி



# பொருளடக்கம்


பதிப்புரை - சுந்தரலிங்கம் கைலாசபதி vi

அணிந்துரை - பேராசிரியர் சு. சுசீந்திரராசா viii

பாயிரம் - மயிலங்கூடலூர் பி. நடராசன் x

சாதகர்க்கு பயன் செய்த மௌன முனிவர் xiii

- பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

ஒப்புயர்வற்ற பரமஞானி xvi

வாழ்க்கைக் குறிப்பு - ச. பரநிருபசிங்கம் 01

சமகால அறிஞர் கருத்து

1. அந்தக்கரண சுத்தி 17
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

2. ஒரு மெய்ஞானி வறுத்த வித்து 18
(திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் B.A)

3. இளமை நினைவு
(திரு. வே. நடராசா அவர்கள் B.S.C, B.T) 20

4. சைவத்திருவாளர் பொ. கைலாசபதி அவர்கள்
(திரு. த. இராமநாதபிள்ளை B.A) 22

5. மௌன தவ முனி
(பண்டிதை. த. வேதநாயகி அம்மாள், வேலணை) 24

6. வாழ்த்துப் பாடல்கள் 26

7. உபசாரப் பத்திரம் 27

8. சிந்தனை அமுதத் துளிகள்
(இ. கிருஷ்ணபிள்ளை தொகுத்தவை) 29

9. கைலாசபதி எடுத்துக் காட்டிய தேவாரங்கள் 48

10. பின் உரை 72

11. The silent Sage P. Kaliasapathy 73

நன்றியுரை 76

முதற் பதிப்பின்

# பதிப்புரை

எனது அன்னையாரின் தந்தை பொ. கைலாசபதி யவர்களின் நூற்றாண்டு நினைவாக ஒரு முன்னோடி முயற்சியாக இச்சிறு நூலைத் தொகுத்தோம்.

"பொ. கைலாசபதியவர்களின் சிந்தனைகள்" யாழ் பல்கலைக்கழக வெளியீடாக 1994 இல் வந்தது. எனது பாட்டியாருக்கு அதன் பிரதி ஒன்று கையளிக்கப்பட்டது. அவர் அதன் பதிப்பாசிரியர்களுக்கு எழுதிய கடிதத்தில் அவர்கள் சாதகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் உப காரமாகச் செய்த சேவையைப் பாராட்டினார். அதைக் கண்ணுற்ற நாளிலிருந்து எனது அன்னையிடம் அவரது தந்தையார் பற்றி விசாரித்தேன். இப்படிப்பட்ட ஒரு மகா னின் வழித்தோன்றலாகப் பிறந்ததை நினைந்து திரு வருளைத் துதித்தேன். "அளவெட்டி தந்த அருஞ் செல்வம்" பற்றி அறியாது இருப்பது எமது தலைமுறை யின் துர்ப்பாக்கியமே.அவர் வரலாற்றையும், அவர் பற் றிய அறிஞர் கூற்றுக்களையும் அவரது சிந்தனை அமுத கலசத்திலிருந்து ஆன்மீக நாட்டமுள்ள சாதாரண வாச கர்கள் சுவைக்கக் கூடிய சிந்தனைத் துளிகளையும் தொகுத்து ஒரு நூல் வெளியிடலாம் என்ற ஆசை உதித்தது.

கைலாசபதி சிந்தனைகளைப் பண்டிதமணி சி. கண பதிப்பிள்ளை 32 கொப்பிகளில் எழுதி வைத்தார். அவற்றை கட்டுவன் ஆசிரியர் திரு. இ. அப்புக்குட்டி அவர்களுடன் முற்றாகப் படித்து தமக்கு உவப்பான கருத்துக்களை 1962 அளவில் எழுதி வைத்தவர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை. அவர் கனடாவிலிருந்து அனுப்பிய "அமுதத்துளிகளை" முதலாகக் கொண்டு

அவர் எழுதிய இரண்டு கொப்பிகளிலிருந்து, ஆரம்ப நிலையிலுள்ளவர்களும் விளங்கக்கூடிய மணிகளைப் பொறுக்கி எடுத்தோம்.

வெகு சிலரால் மட்டும் அறியப்பட்டிருந்த பெரியாரைப் பற்றி இக்காலத்தார் யாரும் அறியார். 1957 இல் அவர் உப அதிபராயிருந்து ஓய்வு பெற்றபோது, திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலை மாணவர்கள், வெளியிட்ட பாராட்டு விழா மலரில் வெளிவந்த சில கட்டுரைகளைத் தந்துள்ளோம்.

எனது தந்தையின் மாமனார் மயிலங்கூடலூர் நடராசனின் "சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி" என்ற தொகுப்பிலிருந்து சில பகுதிகளையும் தொகுத்துள்ளோம்.

கைலாசபதியியல் என்று ஒரு ஆய்வுத்துறை விரிவடைவதால் "பாதை விடுத்து அலையும்" இன்றைய மக்களுக்குட் சிந்தனையாளர்க்கு நல்வழி துலங்கும்.

இதனைத் தொகுப்பதற்கு உதவிய அறிஞர்களுக்கு, குறிப்பாக செல்வி லலிதாமினி முருகேசு அவர்களுக்கு, எனது நன்றி உரியது.

அளவெட்டி — சு. கைலாசபதி
09.06.2001
99வது பிறந்த தினம்

# அணிந்துரை

மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி அவர்கள் பற்றி அறிதல் வேண்டும். அறிவதற்கு எவ்வளவோ உண்டு. ஆனால் ஆதாரங்களைத் தேடிப்பெறவேண்டி உள்ளது. யார் முன் வருவார்கள் என எனது மனம் அவ்வப்போது பலவாறு எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை "மௌன தவமுனிவர் கைலாசபதி, வாழ்வும் சிந்தனையும்" எனப் பெயர் கொண்ட சிறுதொகுப்பு ஒன்று வருவது கண்டு மனங் குளிர்கிறது. இத்தொகுப்பு, கைலாசபதியவர்களின் நூற்றாண்டு நினைவாக ஒரு முன்னோடி முயற்சியாக மலர்கின்றது மிகவும் வரவேற்கத்தக்கது.

கைலாசபதியவர்களின் தத்துவத்தைக் கண்டு முதன் முதலாகப் போற்றியவர் பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்களே. பண்டிதமணி சீடன் போல இருந்து கைலாசபதி அவர்களின் சிந்தனைகளை விளங்கியும் விளங்காமலும் அவ்வவ்போது எழுதிக்கொண்டார். பண்டிதமணியின் ஆக்கங்களில் உள்ள உயர்ந்த, அர்த்த புஷ்டியான கருத்துக்களுக்கு ஊற்றாக இருந்தவர் கைலாசபதி அவர்களே. எனவே பண்டித மணியை நன்கு அறிதற்குக் கைலாசபதியவர்களை அறிதல் வேண்டும். கைலாசபதியவர்களை விட்டுப் பண்டிதமணியை முழுமையாக விளங்கிக் கொள்ள எடுக்கும் முயற்சி பயன் தராது. இது பற்றி நாம் சிந்தித்து ஆவன செய்தல் நன்று.

ஆறுமுகநாவலர், பண்டிதமணி, கைலாசபதி போன்ற வர்கள் பற்றிய முழுமையான ஆய்வு இன்னும் இடம் பெறவில்லை.

இவர்கள் பற்றிய ஆய்வு பொறுமையுடன் திட்டமிட்டு முறைப்படி செய்ய வேண்டியது. ஆரவாரத்திலும் வெளிப் பகட்டிலும் பொழுதைப் போக்காது, இத்தகைய ஆய்வை. உயர் ஆய்வுக்கென நிறுவனங்களில் இருக் கும் அறிஞர் தம் கருமமாக ஸ்வதர்மமாகக் கருதிச் செயற்படவேண்டும். அதுவே நாம் உய்யுமாறு. தக்க முறையில் அணுகினால் கைலாசபதி அவர்களின் சிந் தனைகள் யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தரவல்லன. கைலாசபதி இயல் என ஒன்றை வளர்ப்பது பற்றியும் நாம் சிந்திக்கலாம். ஆர்வம் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து சுந்தரலிங்கம் கைலாசபதி போன்று முயல் வார்களாக.

சு. சுசீந்திரராசா
வாழ்நாள் பேராசிரியர் (மொழியியல்)

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
18.04.2001
தற்போதைய விலாசம் :
11B, $\frac{1}{2}$ அத்தபத்து மாவத்த,
தெகிவளை.

# பாயிரம்

"ஒரு நாள் (15.10.1940) மிக்க அச்சத்துடன் அந்த மகானை அணுகினேன். "பாஷையிரண்" டென்று தொடங்கி "ஆரியமுந் தமிழும்" என்ற பாடம் அன்று நடந்தது. அவர் எனக்குப் படிப்பித்த பாடம் ஆயிரத்துக்குக் குறையா. "உப அதிபர் ஆயிரம்" என்று ஒருவாறு ஒரு புத்தகம் தொகுக்கலாம் போலும். "இவ்வாறு ஈழத்தின் தமிழ்ப் பேரறிஞர் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சிந்தனைச்செல்வர் பொ. கைலாசபதி அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சிந்தனைச்செல்வர் கைலாசபதி ஓர் அறிவியற் பட்டதாரி. 1930 ஆம் ஆண்டு முதல் 1958 ஆம் ஆண்டு வரை இருபத்தெட்டு ஆண்டுகள் ஆசிரிய கலாசாலையில் அறிவியல் ஆசிரியராகவும் உப அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார். இதனால் அவர் " உபஅதிபர்" என்றே எல்லோராலும் அழைக்கப்பட்டார். ஆனால், பண்டிதமணி அவரை மகான் என்று போற்று கிறார். கணித, அறிவியல் ஆசிரியராக விளங்கிய சிந்தனைச் செல்வர் சிலருக்குச் சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கற்பித்திருக்கிறார். ஆனால், பண்டிதமணியே சிந்தனைச் செல்வரின் நிலையான சித்தாந்த மாணவராக விளங்கினார். அவர் சிந்தனைச் செல்வரின் ஆற்றல் பற்றிப் பின் வருமாறு போற்றுகின்றார்:

'பெரியவர்களிடத்து நடந்துகொள்ளும் ஆசாரத்தைத் தழுவிப் பல வருடம் அவர் சிந்தனைகளிலே சொன்னவைகளுள் எழுதக் கூடியவைகளை எழுதிக் கொண்டேயிருந்தேன். எனக்கு எட்டாதவைகளை ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று நான் எண்ணுவதுண்டு. "சில

விதைகளை ஒரு காலத்தில் முளை கொள்ளலாம் என்று எறிந்து விடுவதுண்டு" என்று ஒரு நாள் சொன்னார். அதனாலே விளங்காதவைகளையும் ஒதுக்காமல் எழு தியதுண்டு. அவர் தொடாத துறைகளே இல்லை. "இவ் வளவும் தெரிகிறது" என்று சொல்லுவார்.

பின்பு, சில தினங்களின் பின் "அப்பாலும் தெரி கிறது" என்று சொல்லுவார்."

பண்டிதமணி சிந்தனைச்செல்வரின் உரைக் குறிப் புக்களை வெளியிட விரும்பினார். ஆனால், சிந்தனைச் செல்வரின் மாணவர்கள் அவை குரு சீட முறையில் வர வேண்டுமெனத் தடுத்து விட்டதாகப் பண்டிதமணி குறிப் பிட்டுள்ளார். எனினும் பண்டிதமணி எழுதி வைத்திருந்த உரைக் குறிப்புக்களை "பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள" என்ற நூலாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 1994 இல் வெளியிட்டது.

யாழ் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலை வரும் பேராசிரியருமான சு.சுசீந்திரராசாவும் திரு.ஆ. சபாரத்தினமும் பண்டிதமணியின் உரைக்குறிப்புக் களைப் பெற்றுத் தொகுத்து வெளியிட்டனர். இவ்விரு அறிஞர்களினதும் முயற்சி பெரிதும் போற்றத்தக்கது.

இந்த நூல் வெளியீடு சிந்தனைச் செல்வர் கருத்துக் களைப் பரப்பியது. இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா இந்நூலிலுள்ள குறிப்புரைகளை விளங்கிய வகையில் "சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்ற பெருநூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

சிந்தனைச் செல்வர் 1902 ஆம் ஆண்டு யூன் மாதம் ஒன்பதாம் திகதி பிறந்தார். 2001 ஆம் ஆண்டு யூன் ஒன்பதாம் திகதி அவரது தொண்ணூற்றொன்பதாவது

பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் "மௌன தவ முனிவர்--- வாழ்வும் சிந்தனையும்" என்ற தொகுப்பு நூல் வெளி வருகின்றது. இந்நூலில்,

1. சிந்தனைச் செல்வர் பற்றிய கருத்துரைகள்
2. சிந்தனைச் செல்வரின் கருத்துரைகள் என்பன வெளியிடப்படுகின்றன. நூற்றாண்டு விழாவின் போது இவ்விரு துறைகளையும் முற்றாகத் தொகுத்து நூற்றாண்டு மலராக வெளியிடவேண்டும். இதற்காக நூற்றாண்டு விழாச் சபை ஒன்றை நிறுவ வேண்டும்.

செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

மயிலங்கூடலூர் பி. நடராஜன்

# சாதகர்க்குப் பயன் செய்த மௌன தவமுனிவர்

உபஅதிபர் பொ.கை. அவர்களின் சிந்தனைகள் விவேகிகளுக்குச் சிறந்த விருந்தாகவும், புத்தகப் பூச்சிகளுக்குப் பெரும் சவாலாகவும், அதே சமயம் நல்லார்வமுள்ள சாதகர்க்கு இனிய வழித்துணை போலவும், வழுக்கி விழும் நிலையில் உதவும் ஊன்றுகோல் போலவும் பயன் செய்கின்றன.

காந்தீயச் சிந்தனைகள் பொது உடைமைக் கோட்பாடுகள், சோஷலிசக் கவர்ச்சிகள், ஜனநாயக விழுமியங்கள் என்பன இக்காலச்சாதகர்கள் சாஸ்திர விசுவாசம் கொள்ள இயலாத வண்ணம் குழப்பியடிக்கின்றன. இவற்றால் கவரப்பட்ட பலர் நெறியல்லா நெறிகளையே நம்பிக்கையானவை எனக் கொள்ளும் நிலை உள்ளது. இப்படியான நெருக்கடிகளில் அகப் பட்ட அப்பாவிகளான சாதகர்களுக்கு இனிய கலங்கரை விளக்கம் போல பொ.கை. சிந்தனைகள் பல உள்ளன. இது உலகம் முழுவதையும் தனது சந்நிதி மாத்திரையில் இயக்கும் பரம்பொருளின் தீர்மானமான திட்டத்தின் சிறப்பு என்றே கொள்ள வேண்டியுள்ளது.

வருணாச்சிரம அடிப்படைகளின் உண்மை, அறம், பொருள், இன்பம், வீடு என்ற ஒழுங்கின் நுட்பம், உயர்ந்த கொள்கைகளில் சுயநலம் புகுந்து விளையாடும் தன்மை முதலிய பல விடயங்களில் பொ.கை. சிந்தனைகள் கடவுளின் வரப்பிரசாதமாக உள்ளன.

வருணம் ஆச்சிரமம் என்பன இப்போது குழம்பிய நிலையில் உள்ளபடியால், இக்காலத்தவர் அவற்றை ஒதுக்கிச் செயற்படலாம் என்ற காந்தியின் கோட்பாடும் இவை தேவையற்றவை என்னும் பிற கோட்பாடுகளும்

பொ.கை. அவர்களின் சிந்தனைகளால் நன்கு பரிசீலிக் கப்பட்டு, இலட்சிய வருணாச்சிரமச் சிறப்பும் அவ சியமும் தெளிவாக்கப்பட்டுள்ளன. இவையின்றி ஒருவன் ஆன்மீக வளர்ச்சியடைவதில் உள்ள சிரமங்கள் உணர்த் தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சாதகனும் தன்னுடைய நிலை உண்மை வருணத்தில் எது ஆச்சிரமத்தில் எது என்று அறிந்து மேல்நிலையடையப் பாடுபட வேண்டும் என்னும் உண்மை பொ. கை. சிந்தனைகளில் அழகாக, தெளிவாக, உள்ளது.

தம் மனசறிய தவறு செய்யும் பெரும்பாலானவர்கள் சந்தர்ப்பம் சூழ்நிலைகளைக் காரணமாக்கி சமாதானப் படுகின்றனர். தம்மைப் போன்றவர்கள் முன் தாம் நியாய மான சரியான செயற்பாடுடையவர்களே என்று நிறுவி நிம்மதியடைகின்றனர். கொலைகளில் பெரிய கொலை அறிவுக் கொலை, மிகக் கொடியகொலை. கொன்று பிணமாக்கிய அறிவு ஒருவனை உயர்த்துவது எங்ஙனம்? என்ற கருத்தை உடைய பொ.கை.சிந்தனை இப்படி யானவர்களின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்து, அவர்கள் கூறும் சமாதானங்களில் உள்ள ஓட்டையை பெரிதுபடுத்திக் காண்பிக்கிறது. அரசையும் மனைவி பிள்ளையையும் இழந்தபின், இறந்தது தன் மகனே, மகனைச் சுடுகாட்டுக்குக் கொணர்ந்தது தன் மனைவியே என்று அறிந்தபின்னும், சத்தியத்தில் அணு அளவும் பிசகாது செயற்பட வேண்டுமேயன்றி சந்தர்ப்ப சூழ்நிலை களைக் காரணமாக்கி அறிவுக் கொலை செய்யலாகாது என்று கூறுகின்றது. தீமைக்குக் காரணம் ஆணவத்தின் குணமாகிய

அறியாமையும், கர்மசந்தர்ப்பங்களுமே. என்று சொல்லித் தப்புவது தவறு விருப்பு வெறுப்புக்கு அத் காரி ஆத்மா.

ஒரு காவியப்புலவன் சிறந்த நகைச்சுவை ஒன்றைக் கூறும் போது அதை உணர்ந்து யாராவது சிரிக்காமல் இருந்தால் அது புலவனின் குற்றமன்று என்ற கருத்தை

பண்டிதமணி சி.க. ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இக் கருத்துக்கு அமைய பொ.கை. கருத்தொன்று அழகிய நகைச்சுவையாக உள்ளது.

உலகமே பொய் என்று சொல்லும் மாயாவாதி அந்த உலகிலேயே தன்னைத்தாபிக்க முயலுகின்றான் என்ற கருத்துடைய பொ.கை.சிந்தனை மிக உச்சமான நகைச் சுவையாகும். நகைச்சுவைப்பாணியில் மிக வில்லலாங்கமான விடயத்தை பொ.கை. அழகாகக் கூறியிருக்கிறார். இச்சிந்தனையை முதன் முதல் வாசித்தபோது, இதுவரை காலமும் இப்படியாக ஏன் ஒருவரும் அணுகவில்லை என்று கருதியதுண்டு.

ஆனால் இச் சிந்தனை பகிரங்கமான பின்னரும் இதனைக் கற்றவரும் கல்லாதவரும் எனப்பலர் மாயா வாதத்தை இரசித்துக் கொண்டும் பிரசாரம் செய்து கொண்டும் மாயாவாதத்தை வியந்து ஏற்றுக் கொண்டும் இருப்பது ஒரு பிரபஞ்ச விசித்திரம் என்றே கருதவேண்டி யுள்ளது.

நாவலர் பெருமானின் உயர்தகுதி, திருஞானசம் பந்தர், அகத்தியர் போன்றோரின் மேல்நிலை, காந்தி — ஜேசுநாதர் போன்றோரின் நிலைப்பாடுகள் எனப்பல விடயங்களிலும் தீட்சை - மந்திரம் - உபதேசம் முதலிய பல விடயங்களிலும் பொ.கை. சிந்தனை எவ்வாறு விளங்குகின்றது என்பதை நம்மவர் அனைவரும் அறியும் நிலை உருவாக வேண்டும். "விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்" என்ற மாணிக்கவாசகத்திற்கு உதாரணமாக பொ. கை. சிந்தனைகள் இருந்தும் அவற் றினை பயன் இழக்கும் நிலை நம்மவர்க்கு ஏற்படலா காது.

**விநாயகர் கோவில்,**
**பொன்னாலை,**
**சுழிபுரம்.**

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்**
காசிகண்டம் முதலிய அரிய நூல்களின் ஆசிரியர்

# ஒப்புயர்வற்ற பரமஞானி மௌன தவமுனிவர் கைலாசபதி அவர்கள்

இது கலியுகம். விஷயம் அறிந்த பெரியோர் கலி பிறக்கப்போகிறதென்று பார்த்துப் பார்த்து ஓடினார்கள் என்பது ஐதிகம். இந்தக் கலியுகத்திலே இலைமறை காய்போல வாழ்ந்து மறைந்தவர் தான் மௌனதவ முனிவர் பொ. கைலாசபதி அவர்கள்.

புண்ணிய பூமியாகிய எமது பரத கண்டத்திலே எண் ணில்லாத ஞானிகள் தோன்றி வாழ்ந்து, பல ஆப்த வாக்கியங்களை - அரிய நூல்களை - அருளிச் செய்து, மறைந்துவிட்டார்கள். இவரை மாத்திரம் ஏன் ஒப்புயர் வற்ற பரமஞானி எனப்போற்ற வேண்டும் என்பது மிகப் பொருத்தமான வினாவே. விடை இதோ....

சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்களிலும் பதி னைந்து திருக்கண்கள் உண்டு. வெளிமுகத்திலுள்ள மூன்று கண்களில் இரண்டு எல்லாரிடத்திலும் வெளித் திருக்கின்றது. அவை அகங்காரவிருத்தி, புத்தி விருத்தி என்பனவாகும். அகங்கார விருத்தியில் எட்டுவிருத்திகள் உண்டு. புத்திவிருத்தியில் இருபத்துநாலு பூமிகள், அல்லது படிகள் உண்டு. மூன்றாவது கண் மனவிருத்தி அல்லது தவம் எனப்படும். அது மறைந்திருக்கிறது. வெளிக்க வேண்டும். கச்சியப்பசிவாசாரியாரும் அருண கிரிநாதரும் மனோவிருத்தி வெளித்திருந்தவர்கள். சமீப காலத்தில் இருந்த சரித்திர புருஷர்களுள் மகாத்மா

காந்தியும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் கொஞ்சம் மனோ விருத்தி வெளித்திருந்து மறைந்தவர்கள். இவ்வாறு அகங்காரவிருத்தி புத்திவிருத்தி, பற்றி வேறு யாரும் கூறியதாக நான் அறியவில்லை.

சதாசிவமூர்த்தியின் மூன்று கண்கள் பற்றி இவர் கூறும் கருத்துக்கள் அற்புதமானவை; எந்த நூலிலும் காணப்படாதவை. எனவேதான் இவரை ஒப்புயர்வற்ற பரமஞானி எனக் கூறத்தோன்றுகிறது.

கனடா, ரொறன்ரோவில் வசிக்கும் இ. கிருஷ்ண பிள்ளையின் வேண்டுகோளுக்கு இசைந்து, இக்கருத்தை ச. பரநிருபசிங்கம் ஒலிப்பதிவு செய்தார் (2011).

1958 இல் வெளிவந்த பாராட்டு விழா மலரிலிருந்து எடுத்த

**பொ. கைலாசபதி அவர்களின்**

# வாழ்க்கைக் குறிப்பு


திரு. ச. பரநிருபசிங்கம்
ஆசிரியர், அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.


இது கலியுகம். வைதிகநெறி வழங்கிய புண்ணிய பூமியையே சீர்திருத்தம் என்ற போர்வையிலே மிலேச்ச நாகரிகம் மூடியிருக்கிற காலம். செய்வதுந் தவிர்வதுந் தெரியாது எல்லோரும் *[1] உண்டிருந்து வாழ்வதற்கே உழலுகின்ற காலம். *[2] மிண்டிய மாயாவாதம் என்னுஞ் சண்டமாருதம் சுழித்தடித்தார்க்கின்ற காலம். பாசாண்டி கமே பரநெறி என்கின்ற காலம். உலகாயதனெனும் ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிடம் செறிந்த காலம். இப்படிப்பட்ட காலத்திலே, சிந்திக்க வேண்டிய தென்ன? தவிர்க்க வேண்டியன எவை? நோக்க வேண் டிய இலட்சியமென்ன? என்றின்னோரன்ன பிரச்சினை களை உடையவர்கள் இருந்தால், அவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாய்த் திகழ்பவர் உப அதிபர் அவர்கள்.

இவர் பிறந்த ஊர் அளவெட்டி. சைவவேளாண் மரபினர் தந்தையார் பெயர் வீரகத்தியார் பொன்னம் பலம். தாய் பார்ப்பதி. பிறந்த நாள் 1902ஆம் ஆண்டு யூன் மாதம் ஒன்பதாந் திகதி. இவருக்கு முதலில் வைக் கப்பட்ட பெயர் செல்லப்பா. இவருடைய முற்சந்ததி யினர் ஒருவருடைய பெயரை ஞாபகஞ் செய்யும் முக மாக, கைலாசபதி என்னும் பெயர் இவருடைய தந்தை யாராலே இவருக்கு இடப்பட்டது.

இவர் தமது ஏழாம் வயசு வரையும் அயலிலிருந்த ஆசிரியர்களிடத்திலே ஆரம்பக்கல்வி கற்றார். ஏழாவது வயதில் வீட்டுக்குச் சமீபமாக இருந்த அமெரிக்க மிஷன் பாடசாலையிலே இரண்டாம் வகுப்பிலே சேர்ந்து படித் தார். அக்காலத்திலே ஆங்கிலம் தெரிந்த சுற்றத்தவர் களிடம் ஆங்கில பாடமும் ஆரம்பித்தார். அப்பொழுது அயலூராகிய தெல்லிப்பழையிலே. தமிழ்நாட்டிலே பிர சித்தி பெற்றவராகிய வித்துவான் சிவானந்த ஐயர வர்களிருந்தார்கள். ஐயரவர்கள் இவருடைய குடும்பத் தினருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள்: 1912 ஆம் ஆண்டில் இவர் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கும் பொழுது ஐயரவர்களிடமும் கல்வி கற்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இரவிலே ஐயரவர்களின் வீட்டிற்குச் சென்று ஆங்கில ஆரம்ப பாட புத்தகம் (primer) கற்று வந்தார். அப்பொழுது நன்னெறிச் செய்யுள்களை மனனஞ் செய்யும்படி ஐயரவர்கள் இவரை வற்புறுத்துவதுண்டு. அந்த நேரத்தில் மனனஞ் செய்வது இவருக்குக் கசப் பாயிருந்தது. அப்படி மூன்று மாத காலம் ஐயரவர் களிடம் படித்துக் கொண்டிருக்கையில் இவருக்குச் சிரங்கு நோய் கடினமாக வந்தது. அதோடு அந்தப்படிப்பு நின்று விட்டது.*[3]

அளவெட்டிக்கும் வேதாரணியத்துச் சைவக் குருக் கள் மாருக்கும் தொடர்புண்டென்பது யாவருமறிந்ததே. இவருடைய வீட்டுக்குப் பக்கத்திலே இவருடைய குடும் பத்தினரால் கட்டுவிக்கப்பட்ட ஒரு மடத்திலே வேதா ரணியக் குருக்கள்மார் இருந்து வந்தனர். அவர்கள் தேவாரப்பண் முறைகளிலே தேர்ச்சியுடையவர்களென் பது உலகப் பிரசித்தம் உபஅதிபரவர்கள் சிறுபிள்ளை யாக இருந்த பொழுது அவருடைய தோற்றம் எவ் வாறிருக்குமென்பது அவரைக் கண்ட அனைவரும் ஊகிக்

கத்தக்கது. குருக்கள்மார் தேவாரப்பணிகள் ஓதும் பொழுது இவரைத் தங்கள் மடியிலே தூக்கி வைத்து இவருக்கும் பண்களை ஊட்டுவதுண்டு. சங்கீதத்திலே - அதுவும் பண்முறைகளிலே பயிலும் வாய்ப்பு இவருக்கு அந்தப் பருவத்திலேயே வாய்த்தது.

இப்பொழுது அருணோதயக் கல்லூரி என வழங்கப் படும் பாடசாலையில் ஆங்கிலம் கற்பதற்கு 1913 ஆம் ஆண்டு மூன்று மாத காலம் வரையில் சென்று வந்தார். அப்பொழுதும் சிரங்கு நோய் காரணமாகப் படிப்புத் தடைப்பட்டது பின்பு 1914 ஆம் ஆண்டு அளவெட்டி ஞானோதய வித்தியாசாலையில் தமிழ் ஆறாம் வகுப்பிற் சேர்ந்து அடுத்த ஆண்டு ஏழாம் வகுப்புப் பரீட்சையிற் சித்தியடைந்தார். அக்காலத்தில் மேல் வகுப்புக்கள் இல்லை. அப்பொழுது கோப்பாயிலிருந்த போதனா சாலையிற் சேர்த்து இவரை ஒரு தமிழாசிரியராக்கும் நோக்கத்துடன் அதற்கு வேண்டிய ஆயத்தங்களை இவருடைய தந்தையார் செய்து கொண்டிருந்தார். கொஞ்சம் ஆங்கிலம் படித்துவிட்டுச் செல்வது நல்ல தென்றும் இவரைத் தமது ஆங்கில பாடசாலைக்கு அனுப்பும் படியும் மல்லாகம் ஆங்கில பாடசாலை முகாமைக்காரராய் அப்பொழுதிருந்த நொத்தாரிசு துரையப்பா அவர்கள் இவருடைய தந்தையாருக்குக் கூறினார்கள். எனவே 1916ஆம் வருடம் மல்லாகம் ஆங்கில பாடசாலையில் இரண்டாம் வருட வகுப்பில் (Second Year) சேர்ந்தார்.

இவர் மல்லாகம் ஆங்கில பாடசாலையிற் சேர்ந்த காலத்தில் தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. இரத்தின சபாபதி உபாத்தியாயரவர்களும் அங்கே ஒரு ஆசிரி யராய் இருந்தார்கள். அவருடைய சரித்திரமும் இவரு டைய சரித்திரம் போன்றதே. அவர் ஒரு அதிமனிதன்

(Super Man*⁴) என்று கூறுவதே பொருத்தமுடையது என்று நினைக்கிறேன். அவர் இரண்டாம் வருடவகுப்பில் ஒரு பிரிவுக்கு ஆசிரியராய் இருந்து வந்தார். அவருடைய வகுப்புக்குப் பக்கத்தே மற்றொரு பிரிவில் உபஅதிபர் மாணவராய் இருந்தார்.

ஒரு நாள் இந்த மாணவர் ஒருவருக்கும் சொல்லா மல், தம்வகுப்பை விட்டு அடுத்த திரு. இரத்தினசபாபதி உபாத்தியாயர் நடத்தும் வகுப்பில் போயிருந்து கொண் டார். அதனையறிந்த தலைமையாசிரியரும் மற்றோரும் போயிருந்து கொண்டார். அதனையறிந்த தலைமை யாசிரியரும் மற்றோரும் இவர் சிறுவராய் இருந்தமை யாற் போலும், இவருடைய விருப்பத்தின் படியே விட்டு விட்டார்கள். அங்கே ஆறாம் வகுப்பிலே திரு. இரத்தின சபாபதி உபாத்தியாரவர்களே இவருக்குக் கணிதம் படிப்பிக்கிற சந்தர்ப்பம் வந்தது இவருடைய விவேகத்தை யும் ஊக்கத்தையும் கண்ட உபாத்தியாயர் சனி, ஞாயிறுகளிலே வீட்டுக்கு வந்தால் கணிதம் படிப் பிக்கலாம் என்றார். படிப்பிற் சிரத்தையுடைய இவருக்கு அது நல்ல வாய்ப்பாயிற்று. அவர் சொல்லியபடியே வீட்டிற்குச் சென்று கணிதம் கற்று வந்தார். ஆறு மாதம் வரையில் படித்தபின்பு கணிதத்திலே வேறு என்ன படிக்கலாம்" என உபாத்தியாயரைக் கேட்டார். படித்த இவ்வளவும் மற்றிக்குலேஷன் (Matriculation) பரீட்சைக் குப் போதுமானது. இனி மற்றப் பாடங்களையும் இவ் வாறே படித்துவிட்டால் கலாசாலைகளிலே காலத்தை யும் பணத்தையும் வீணாக்காது பரீட்சைக்குத் தோற்ற லாம்" என உபாத்தியாயர் சொன்னார்.

1981 ஆம் ஆண்டில் இவருடைய நண்பர்கள் சிலர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிற் கற்று வந்தனர். அப்பொழுது புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்கள் அங்கே உதவியாசிரியராய் இருந்தார்கள்.

இவர் மல்லாகத்தில் கற்கும் பொழுதே நண்பர்களுடனும் விக்ரோறியாக் கல்லூரிக்குச் செல்வது வழக்கம். அதனால் சிவபாதசுந்தரம் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வந்தது. அந்தக் காலத்திலே மல்லாகத்திலே தலைமையாசிரியராய் இருந்தவர் மயிலிட்டி சி. சுவாமிநாதன் அவர்கள். சுவாமிநாதனவர்களின் அனுமதியின்படியும் சிவபாதசுந்தமவர்களின் புத்தியின் படியும் மல்லாகத்தில் E. S. L. C வகுப்பிற் படிக்கும் பொழுதே சனி, ஞாயிறுகளிலும் சுழிபுரத்திற்குச் சென்று மற்றிக்குஷேன் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து வந்தார். 1920 ஆம் ஆண்டு அக்ரோபர் மாதம் நடந்த E. S. L. C பரீட்சையிற் சித்தியடைந்தார். பின் 1921 ஆம் ஆண்டு யூன் மாதம் நடந்த மற்றிக்குலேஷன் பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தார். பரீட்சை முடிந்த மூன்று மாத காலம் வரையில் மல்லாகம் ஆங்கில பாடசாலையில் ஆசிரியராய் இருந்தார். பின்பு பரமேசுவரக் கல்லூரியில் இரண்டு மூன்று மாதம் ஆசிரியராய் இருந்தார். அப்பொழுது தான் அங்கே லண்டன் "இன்ரர்சயன்ஸ்" வகுப்பு ஆரம்பமானது. அவர் படிப்பித்தலை நிறுத்தி அந்த வகுப்பில் சேர்ந்து படித்து 1924 ஆம் வருடம் சித்தியடைந்தார். அப்பொழுது சு.சிவபாதசுந்தரமவர்கள் சில காலம் இவருக்குக் கணித ஆசிரியராய் இருந்தார்கள்*[5]. இவர் "இன்ரசயன்ஸ்" பரீட்சையை முடித்துக் கொண்டு மல்லாகத்திலே ஆசிரியராய் இருந்தார். அப்பொழுது ஆங்கில (Teacher's Certificate) ஆசிரிய தராதர பத்திர பரீட்சைக்கு வேண்டிய பாடங்களை எடுத்து அப்பரீட்சையையும் பூர்த்தி செய்தார். பின் 1927 ஆம் ஆண்டு விக்ரோறியாக் கல்லூரிக்கு ஆசிரியராய்ச் சென்றார். அந்தக் காலத்திலே B.Sc., பரீட்சைக்கும் ஆயத்தம் செய்து கொண்டி

ருந்தார். திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை 1928 ஆம் ஆண்டிலே ஆரம்பமானது. அங்கே கல்வி போதிக் கத்தக்க ஒரு ஆசிரியரை ஒழுங்கு செய்யும்படி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் அப்பொழுது விக்ரோறி யாக் கல்லூரியிலே அதிபராய் இருந்த சு. சிவபாத சுந்தரமவர்களைக் கேட்டார்கள். சிவபாதசுந்தரமவர்கள் தம்மோடு உதவியாசிரியராய் இருந்த இவரைப் போகு மாறு கேட்டுக் கொண்டனர். இவர் 1930 ஆம் ஆண்டு B.Sc., பரீட்சையிற் சித்தியடைந்தவுடன் சைவாசிரிய கலாசாலைக்கு வந்து உப அதிபராய்க் கடமையாற்றத் தொடங்கினார்.

இவர் B.Sc., பரீட்சையிற் சித்தியடைந்த பின்பு M.Sc. பரீட்சைக்கு ஏன் படிக்கவில்லை என்று இவரிலே கரிசனையுள்ளவர்கள் கேட்பதுண்டு. இரத்தின சபாபதி உபாத்தியாயரும் இவர் சித்தியடைந்தமையைப் பற்றி அறிந்திருப்பார். ஒருநாள் அவர் இவரைச் சந்தித்த பொழுது "M.Sc. பரீட்சைக்கு ஆயத்தம் செய்யவில் லையா" என்று கேட்டார். அந்தக் கேள்வி கொஞ்சக் காலமாக இவருக்கு மன வேதனையை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது. கல்வி என்றாலென்ன என்பது இளமை தொட்டே உப அதிபரவர்களுக்குத் தெரியும். பொருளை அடையச் செய்வதுதான் கல்வி, *" விண்ணாகி மண் ணாகி மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந்தெல்லை யில்லாத" பொருளாய் ஒருவர் இருக்கிறார். அவரை அறிந்து அடையச் செய்வதுதான் கல்வியின் நோக்கம். உலகில் சௌகரியமாக இருப்பதற்கு வேண்டியன எவை என்பதைப் பற்றிய ஆராய்ச்சி கல்வி என்னும் சொல்லால் வழங்கத் தக்கதன்று. சீவனத்திற்கு ஏதோ செய்யவேண்டியிருக்கிறதே என்று ஆங்கிலத்தைப் படித்

தாரே யொழியச் சர்வகலாசாலைப் பட்டங்கள் தாம் காரியம் என்று படித்தவரல்லர் உப அதிபர் அவர்கள். "நானும் இந்த ஆங்கிலப் படிப்பைப் பெரிய காரியமாக நினைத்துப் படித்தேன், என்றுதானே உபாத்தியாயர் கூட நினைத்து, M.Sc க்குப் படிக்கவில்லையா என்று கேட்க நேர்ந்ததே" என்ற யோசனைதான் இவருடைய மன வேதனைக்குக் காரணமாய் இருந்தது.

ஆங்கிலக்கல்வி மெய்யறிவுக்கு வழி செய்யாது என்று பரீட்சைகளை விட்டாரேயொழிய ஆங்கில மொழி யிலுள்ள நூல்களை ஆராய்வதை இவர் நிறுத்த வில்லை. ஆங்கில மொழியிற் கிடைக்கக் கூடிய அறிவுத் துறை நூல்களெல்லாம் ஆராய்ந்திருக்கிறார். அந்த ஆராய்ச்சியின் பயனாக அவர் கண்ட உண்மை மேலைத் தேசத்திலிருந்தவர்களுள் உயர்ந்த நோக்குள்ளவர்கள் கான்ற் (Kant), ஹெகல் (Hegel), பேகன் (Bacon). சேக்ஸ்பியர் (Shakespeare) ஆகியவர்களே ஆயினும் கிரேக்க தத்துவஞானிகளாகிய சோக்கிரதீஸ் (Socrates), பிளாற்றோ (Plato) இருவரும் அவர்களிலும் பார்க்க உயர்ந்த விஷயங்களையும் யோசித்திருக்கிறார்கள் ஆனால் இங்கேயிருந்த வைதிக நெறியினர் துவங்கு மிடத்தைக் கூட மேலைத்தேசத்தவர்கள் எட்டவில்லை என்பதாம். பைபிள் (Bible) எழுதியவர்கள் சில உயர்ந்த விஷயங்களைக் குறிப்பாக யோசித்திருக்கிறார் களென்பது அதை வாசித்து இவர் கண்ட உண்மை.

இவர் விவாகம் செய்தது 1926ஆம் ஆண்டு. இவர் மனைவி இவருடைய உறவினர். அவர் கண்டாரெல்லாம் வியக்கும்படி இவருக்கு வேண்டிய பணிவிடைகளைப் புரிந்து இவருடைய சாதனைக்கேற்ற முறையில் வாழ்ந்து, 1941ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

இரண்டாம் முறையும் அளவெட்டியிலேயே இவர் விவாகம் செய்தார். இப்பொழுது இரு பெண்குழந்தைகளிருக்கிறார்கள். இவர் இருந்தோம்பி இல்வாழ்தெல்லாம் விருந்தோம்பி வேளை ஆண்மைசெய்தற் பொருட்டேயாம். வேள் - மன்மதன். ஆண்மை - ஆளுதல். *7

இவருடைய பெருமைக்குரிய காரணங்கள் அளப்பில. இவர் கல்வி கற்பிப்பதில் எவ்வளவு திறமை வாய்ந்தவர் என்பது இவரை ஆசிரிய கலாசாலைக்குச் சிபார்சு செய்தவர் யார் என்பதிலிருந்தே ஓரளவிற்கு ஊகிக்கப்படும். அன்றியும் இவரிடம் கற்று ஆசிரியர்களாய்ச் சேவை செய்யும் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இவர் திறமையை நன்கு அறிவர். அவர்கள் மூலம் ஏனை யோரும் அறிவர். இவர் ஆசிரிய கலாசாலையில் உள நூல் முதல் தோட்டப் பாடம் ஈறாக எல்லாப் பாடங் களும் கற்பித்திருக்கிறார். நான் மகரகம ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும் பொழுது அங்கு உளநூல், கல்வி முறை ஆகிய பாடங்களைப் போதித்தோர் மேலைத்தேச சர்வகலாசாலைகளிற் பயிற்சி பெற்ற பட்டதாரிகள். அவர்கள் சில விடயங்களைப் பற்றிப் போதிக்கும் பொழுது அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர் உப அதிபரிடம் ஆசிரிய மாணவர்களாய் இருந்தவர்கள். அந்த விஷயங்களைப் பற்றி நாங்கள் பேசிய பொழுது "இவற்றை உப அதிபரிடமல்லவா கேட்க வேண்டும்" என்று ஒருவர் சொன்னார். உப அதிபர் இவற்றிலும் நல்ல திறமையுடையவர்களோ என்று நான் கேட்டேன். "அவர் ஒரு கலைக்களஞ்சியமல்லவோ (Encyclopaedia)" என்று அவர் உடனே பதில் சொன்னார். வேறும் சிலர் அப்படிச் சொன்னதை நான் கேட்டிருக்கிறேன்.

இது நிற்க, இவருடைய சான்றாண்மை மிக மேலா னது. கலாசாலை சம்பந்தமாக வந்த பெரிய பிரச்சனை களெல்லாவற்றிலும் இவர் நடுவுநிலைமை தவறாது "சமன் செய்து சீர் தூக்குங் கோல் போலமைந்து ஒரு பாற் கோடாது இருந்தமை ஒன்றே இவருடைய சால் புடைமைக்கு எடுத்துக் காட்டாகும்.

இவருடைய வரலாற்றைச் சொல்லப்புகுந்த ஒருவர் இவரிலேயுள்ள விசேட அம்சங்கள் சிலவற்றையேனும் கூறாது விடுதல் பிழையாகுமென மனத்திற் படுகின்றது. இவர் இளமையிலிருந்தே புலமை நிரம்பியவராய் இருந் திருக்கிறார். ஒரு செய்யுளிலே ஒரு எழுத்துக் குறைந் தாலும் அதைக் காணக்கூடிய ஆற்றல் இவருக்கு உண்டு. சில சமயங்களில் இவரிடமிருந்து கருத்துக்கள் நிறைந்த செய்யுள்கள் அநாயசமாக வருவதுமுண்டு. இங்ஙனமன்றி வாக்குச் சுத்தம் அறியக்கூடிய இயல்பும், பெரியோரின் போக்குகளையறியக் கூடிய ஆற்றலும் சாஸ்திரங்களின் நுண்பொருள்களையறியக் கூடிய நுண் மாணுழைபுலமும் இவருக்கிருக்கின்றன. வாக்குச் சுத்தம் கைவந்தவர்கள் தாம் அன்னம் போல் நூல்களின் உண்மைப் பொருளை அறிய வல்லவர்கள். தர்மாதர்மம் தெரியாதோர் சேர்த்துக் கட்டிய பகுதிகள் அவர்களுக்குத் தான் விளங்கும். பெரியோர்களின் போக்குகளை அறியக் கூடிய தகைமையுடையவர்களுக்குத்தான் பெரியோர் களிற் கட்டி நடத்துகிற பொய்க்கதைகள் புறம்பாகத் தெரியும். இந்த இரண்டும் கைவந்தவர்களே ஆப்த வாக்கி யங்களை-ஆகமங்களை-அறியவல்லவர்கள்.

இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்னரே கடைச் சங்கம் நடாத்திய பாண்டிய அரசன் பொருணூல் வல்லாரைக் காணவில்லை என விசனிக்க சேர்ந்தது. அதற்குப்பின் புறு மதப் புயல்கள் எத்தனையோ வீசி

யிருக்கின்றன. இறுதியாக மிலேச்ச நாகரிகம் சூழ்ந்து கொண்டது. இவற்றிற்கிடையே வைதிக முறையான நூல்களுக்கு உரைகாணப்புகுந்த ஆசிரியர்கள் மூல நூல்களின் பெயரால் தங்கள் தங்கள் மதங்களை நிறுவிப் போயினர். தேவர் குறளும், திருநான்மறை முடிவும், மூவர் தமிழும் முனிமொழியும் கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகமென் றுணர முடியாத சிக்கலான நிலையை உண்டுபண்ணி விட்டார்கள். விசாரமுடையவர்களும் நூல்களின் மூலம் உண்மையறிய முடியாத சூழ்நிலையுண்டாகி எவ்வளவோ காலமாகிவிட்டது. உலகப் புரட்சிகளில் அள்ளுண்டு போகாமலும், உரையாசிரியர்களின் வலைகளிற் சிக்காமலும் தனித்து நின்று சிந்தித்துப் பிரமசூத்திரம், தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார், திருமந்திரம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சங்க இலக்கியங்கள் ஆதியாம் நூல்களின் நுண்பொருள் களை அறியக்கூடியவராய் இருந்தமையே உப அதிபரவர்களின் தனிப்பெருஞ் சிறப்பாகும்.

ஆரியம் - தமிழ் வேதம் - ஆகமம், சமயம் - மார்க்கம், வைதிகம் - சைவம் அகச்சமயம் - புறச்சமயம், வேதாந்தம் - சித்தாந்தம் சொரூபம் - தடஸ்தம், சடம் - சித்து, பொய் - மெய், வருணம் - ஆச்சிரமம், எண் - எழுத்து, அகத்திணை - புறத்திணை, களவு - கற்பு, எண்வகை மன்றல், வேதவேள்வி, அந்தக்கரணம், தவம், பணி, கதி, புருடார்த்தம், அன்பு, அருள், ஐந்தெழுத்து, உபநிடதம் என்றின்னோரன்ன எண்ணிறந்த விடயங்கள் பற்றி இவர் சொல்லும் கருத்துக்கள் அதியற்புத மானவை. ஆழ்ந்த சிந்தனையை வருவிப்பவை. வைதிக சைவ சாஸ்திரங்கள் அனைத்திற்கும் மாறில்லாதவை. "தருமம்" என்றாலென்ன என்பதை இவரிடம் கேட்டுத்

தெளிந்தால் அ∴தொன்றுதானே ஒருவர் எடுத்த பிறப் புக்குப் போது மானது.

இவருடைய சிந்தனைகள் வெறும் புத்தகப்படிப்பால் வந்தவைகள் அல்ல. அந்தக்கரண சுத்தியால் வந்த அநுபவங்களேயாம்.

1932 ஆம் ஆண்டளவில் ஒருமுறை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையவர்களும் உப அதிபரவர்களும் கீரிமலைக்குச் சென்றார்கள். அங்கே கிருஷ்ணபிள்ளை யின் மடத்திலே தங்குவதாக ஏற்பாடு. அங்கே தங்குவது கடற்காற்று வாங்குவதற்காக அல்ல. கல்வி கற்பதற் காகவே. பண்டிதமணி இவருக்குத் தொல்காப்பியம் சொல்லுவதாகவும், இவர் பண்டிதருக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதாகவும் யோசனை. பண்டிதமணி தமது ஆசிரியர்களிடம் கற்கும் பொழுது தயாரித்த குறிப் புக்களை விரித்து வைத்துச் சொல்லத் தொடங்கினார். கொஞ்ச நேரத்தாற் குறிப்புக்களைக் கட்டி வைத்து விட்டுப் பண்டிதமணி இவரிடம் தொல்காப்பியம் கேட்க வேண்டிய நிலை வந்துவிட்டது, காரணமென்ன? பண்டித மணியவர்கள் பேராசிரியர், நச்சினார்க்கினியர், இளம் பூரணர் முதலியோருடைய உரைகளிலும் தமது ஆசிரி யர்களிடத்திலும் அறிந்தவற்றிலும் பார்க்கச் சிறந்த புதிய உயரிய கருத்துக்கள் இவர் சொல்லத் தொடங்கி விட்டார். இது வெறும் கற்பனைக் கதையல்ல. பண்டித மணியவர்களே இதை எனக்குப் பல முறை சொல்லி யிருக்கிறார்கள்.

**'மதிநுட்பம் நூலோடுடையார்க் கதிநுட்பம்**
**யாவுள முன்னிற் பவை'**

இவர் உரையாசிரியர்களைப் பற்றிச் சொன்ன ஒரு கருத்தை இங்கே குறியாமல் விட மனம் ஒப்பவில்லை.

அது வருமாறு: நூலுக்கு உரை என்றால் நக்கீரருடைய உரை தான். நூலுக்குள் ஏதோகிடக்கிறது என்ற குறிப் பிலே சிவாக்கிரயோகிகள் உரை செய்திருக்கிறார். அடுத்தபடி சிவஞானமுனிவருடைய உரை. அதற்குப் பின் சேனாவரையராதியோரைச் சொல்லலாம். சங்கரரு டைய உரைக்கும் நூலுக்கும் சம்பந்தமில்லை. பரிமேல ழகரைக் கிழப்பிவிட்டது, சங்கரருக்குப் போல, நூலின் மகிமையும் அழகிய பாஷை நடையுமே.

1933 ஆம் ஆண்டில் இவருடைய வாழ்க்கையிற் பல மாற்றங்கள் உண்டாயின. எத்தனை வீண் சொற்கள் இன்றைக்குப் பேசினேன் என்று இரவிலே கணக்குப் பார்க்கும் வழக்கம் அப்பொழுதிருந்ததாக ஒருமுறை எனக்குச் சொன்னார். அந்த வருடம் பல புதுக் காரி யங்களை இவர் தமக்குள்ளே காணக்கூடியவராய் இருந் தார். இவற்றை இந்தக் காலத்திலே யாருடன் பேசலாம் என்ற பிரச்சனையுமிருந்தது. காத்திராப் பிரகாரமாக ஒரு நாள் கீரிமலையிலே இரத்தினசபாபதி உபாத்தியாரைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவருடன் பேசலா மென்று ஒரு நினைவு வர, சில விஷயங் களைப் பேச லானார். அன்று தொடக்கம் 1945ம் ஆண்டு உபாத்தி யாயரவர்கள் மறையும் வரை வாரம் தோறும் அவரைச் சந்தித்துச் சம்பாஷிக்கும் வழக்கமிருந்தது. "அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை' முன்தவத்தினால் இயல்பாகவே இவருக்கு அமைந்திருந்தது. நூல்களிலே காண்டற்கரிய பல புதுக்காரியங்களை உபாத்தியாயர் இவருக்குச்சொல்லியிருக்கலாம். உபாத்தியாயரே மெச் சக்கூடிய பல புது விஷயங்களை இவர் உபாத்தி யாயரோடு கதைத்திருக்கலாம்.

பரிபூரண அன்பு கட்டுப்படுத்தாது கட்டளை செய் யாது. இறைவன் "நிறுத்துவதோர் குணமில்லான்". "ஓடி

மீள்கென ஆடல் பார்த்திருப்பவன்' பிறரை நிறுத்துவது, அவர்களுடையடி செயல்களிலே தீண்டுவது, அவர்களை ஆள்வது, கட்டளை செய்வதெல்லாம் அவைதிகம்- பந்தத்திற்கு வழி. இன்னோரன்ன எண்ணிறைந்த உண்மைகளை இவர் அநுபவத்திற் கண்டார். உப அதிபரவர்கள் தம்மோடு தொடர்புபட்டவர்களோடு எவ்வாறு நடந்திருக்கிறார் என்பது தொடர்புபட்டா ரொவ்வொருவரும் நன்கறிந்ததே. அவர் பிறருடன் மாத்திரமன்றிச் சுற்றத்தவருடனும் மனைவி மக்களுடனும் கூடத் தீண்டாமலே வாழ்ந்து வருகிறார். அவருடைய சாதனை விசேடத்தினாலே, அவர் பலருடனும் பல சந்தர்ப்பங்களிலும் ஊடாடவேண்டியிருந்தும் பிறராற்றீண்டப்படாமலிருக்கிறாரென்பது நன்கு அறியக்கிடக்கின்றது.

இவர் தமக்கு நேர்படுகின்ற முயற்சிகளையும் தீண்டாமலே தீண்டி வந்தார். முயற்சியை இவர் தாமாகத் தேடுவதுமில்லை வந்த முயற்சியைத் தாமாக உதறித் தள்ளுவதுமில்லை. முயற்சி வரும் போகும் இவர் இருந்தபடி இருப்பார். அதனால் இவருக்கு அசைவு பிறப்பதில்லை.

**'இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்'**

மகான்கள் பிராரத்தத்தைப் புசிக்கும் போது, ஆகாமியம் ஏறாமல் விருப்பு வெறுப்பின்றி இருப்பவர், என்று சாத்திரங்களிற் காணுகின்ற உண்மையை இவரிடம் நேரிலே காணலாம்.

இவருடன் நெடுநாட் பழகிய ஒருவர்*[8] தமது மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு 1934ஆம் ஆண்டில் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தை வாசிக்கும் சந்தர்ப்பம் சமீப காலத்தில் எனக்குக் கிடைத்தது. பின்வரும் வசனங்கள் அக்கடிதத்திற் கண்டவை. "சைவசித்தாந்தம்

விளங்கிய இருவர் இப்பொழுது யாழ்ப்பாணத்திலே இருக்கிறார்கள். அவர்களே ஆறுமுக நாவலரையாவை யறிய வல்லவர்கள் அவர்களில் ஒருவர் சைவாசிரிய கலாசாலை உப அதிபர் பொ. கைலாசபதியவர்கள். அவர்கள் மனித உருவில் ஒரு தெய்வம்."

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரின் வாய் மொழிகளாலே இவருடைய வாழ்க்கைக் குறிப்பை முற்றுறச் செய்வது பொருத்தமுடையதென நினைக்கி றேன். இவர் கற்பவை கசடறக் கற்றவர் கற்றதற்குத் தக நிற்பவர். கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழலே என்பதனை ஐயந்திரிபின்றி உணர்ந்தவர். இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டவர். மனத் துக்கண் மாசில்லாதவர். ஆற்றினிழுக்கா இல்வாழ்க்கை நடத்துபவர். அறிவறிந்தாற்றினடங்கப் பெற்றவர். நிலை யிற்றிரியா தடங்கியவர். ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பு பவர். புறஞ்சொல்லும் புன்மையில்லாதவர். பயனில மறந்தும் பேசாதவர். உற்றநோய் நோற்றலையும் உயிர் குறுகண் செய்யாமையையும் மேற்கொண்டவர். வாய்மை யுடையவர். ஆன்றமைந்த சொல்லுடையவர். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிபவர். வினைத்தூய்மை உடையவர். அவையறிந்து, சொல் லின் தொகையறிந்து ஆராய்ந்து சொல்லுந் தூய்மையர். சான்றாண்மையுடையவர். கற்றீண்டு மெய்ப்பொருள் காணு நெறியினர். இவர் பெற்றிருக்கும் அறிவு சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீ, நன்றின் பாலுய்ப்பது எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது எண் பொருளவாகச் செலச் சொல்லித்தான் பிறர் வாய் நுண்பொருள் காண்பது. மலர்தலும் கூம்பலுமில்லாதது. எவ்வதுறைவதுலகம் உலகத்தோடவ்வது. அஞ்சுவதஞ்சுவது.

இப்பெருந்தகையார் உள்ளத்தாற் பொய்யாது அறிவுக் கறிவைக் கொல்லாது, சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகி வருகின்றார். இவருடைய ஒழுகலாறு வாழ்வதாக.

(இம்மலர் வெளியீட்டிற்குப் பொறுப்பாளராய் இருப் பவர் *' உப அதிபர். அவர்களின் வாழ்க்கை வர லாற்றை எழுதித் தரும்படி என்னைக் கேட்டார். அது எனக்கியலாத, மிகக் கஷ்டமான காரியம் என்னும் எண்ணமுடையேனாதலின் முதலில் மறுத்து விட்டேன். உப அதிபரவர்கள் ஒரு சாமானிய மனிதரல்லர். அவ ரைப் போன்று ஆழ்ந்தகன்ற அறிவும் தூயவாழ்க்கையும் உடையவர்களை நாம் கண்டதுமில்லை சமீபகால சரித் திரங்களிலே கேட்டதுமில்லை. அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டிய தேவையும் சூழலும் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை. எனினும் மலருக்குரிய வர்கள் மீண்டும் மீண்டும் என்னை வேண்டிக் கொண்ட படியினாலும் "நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே" என்றமையினாலும் அவரைப்பற்றித் தெரிந்த வற்றுட் சில குறிப்புக்களை ஈண்டு எழுதலாயினேன்)

**இப்பெருந்தகையார் உள்ளத்தாற் பொய்யாது, அறிவுக் கறிவைக் கொல்லாது, சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகி வருகின்றார். இவருடைய ஒழுகலாறு வாழ்வ தாக.**

பதிப்பாசிரியர் குறிப்புகள்

*[1] தற்கால மக்கள் உண்டு உடுத்து ஏதோ வாழ்வதாக நினைக்கும் இருப்பை ஏளனமாகச் சுட்ட கைலாசபதியவர்கள் எடுத்துக் காட்டும் வில்லியாரதத் தொடர். கிருஷ்ணனைத்தூது போகச் சொல்கிறார் தர்மபுத்திரர். ஐவரும் திரௌபதியும் கூறியவற்றை எடுத்துக் கொள்ளாது கிருஷ்ணனைப் புறப்படச் சொல்கிறார். கண்ணனின் தம்பி சாத்தகி "நீங்கள் சாதாரண மக்கள் / மாக்கள் போல "உண்டு, இருந்துவாழ" ஆசைப்படு கிறீர்களா? என்று ரோஷம் பிறக்க உரைக்கிறான். சி. கணபதிப்பிள்ளை மூலம் இது தமிழறிஞர் வழக்கில் நன்றாகப் படிந்திருந்தது.

*[2] மணிவாசகர் - திருவாசகம் -

*[3] 1950 களின் நடுப்பகுதியில் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை ஆண்டுச் சஞ்சிகையாகிய "நாவலன்" ஒன்றில் ஒரு மாணவன் கைலாசபதியவர்களைப் பற்றிப் பாடிய செய்யுள் ஒன்றில் "சிவானந்தையர் நற்சீடராய்" என்ற சொற்றொடரை உபயோகித்தார். அது அத் துணைப் பொருத்தமுடையது அன்று என்பதற்காகவே இக்கட்டுரையாசிரியர் அந்த விடயத்தை விரிவாக எழுதியுள்ளார்.

*[4] ஸ்ரீ அரவிந்தர் உபயோகிக்கும் பொருளில் இங்கு வருகிறது.

*[5] சு.சிவபாதசுந்தரம் கைலாசபதியவர்களைத் தமது மாணவன் எனக் குறிப்பிடுவது வழக்கம். (பார்க்க: :சு.சிவபாதசுந்தரத்தின் உளவியல்நூல் முகவுரை) ஒருவரின் உரிமையைப் பேண வேண்டும் என்பதற்கமைய அவர் சு.சி கொண்டாடிய உரிமையை மறுப்பதில்லை.

*[6] மணிவாசகர் - திருவாசகம் - திருவெம்பாவை

*[7] *இக் குறளுக்கு கைலாசபதியவர்கள் சொல்லும் விசேட பொருளை இங்கு கட்டுரை ஆசிரியர் சுட்டுகிறார். வேளை ஆண்மை செய்யபவன் மன்மதனைத் தன் சொற்கேட்டு நடக்கச் செய்பவன் கற்பொழுக் கத்தில் சாத்திரங்கள் கூறிய படியே தம்பதிகள் உடனுறைதல் நிகழும் (தொல்காப்பியம்) அவர்கள் இல்லறத்து ஒழுகினாலும் துறவிகளே.

*[8] இது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையைக் குறிக்கும். அவர் ஆறுமுகநாவலரின் தமையனார். புத்திரரும்,24 வயது வரை நாவலரின் அணுக்கன்றொண்டராயிருந்தவரும், நாவலர் வித்தியாசாலைப் பரிபாலகருமான த. கைலாசபிள்ளைக்கு எழுதிய கடிதம் வித்தியாசாலை அதிபர் பதவியைப் பொறுப்பேற்கும் படி கேட்டபோது சி.க எழுதிய பதிற் கடிதம் இங்கு எடுத்துக் காட்டப்பட்டது.

*[9] 1958ல் பாராட்டுவிழா மலர் வெளியீட்டுக்குத் தோன்றாத் துணையாய் நின்றவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. ச.ப இதனை உப அதியர் சந்நிதியில் வாசித்துக் காட்டிய பின்னரே வெளியிடக் கொடுத்தார்.

# 1 அந்தக்கரண சுத்தி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

புறக்கரணங்களுள் கண் பிரதானமானது. கண் உள்ளவனுக்கும் அஃது இல்லாதவனுக்கும் உள்ள வேறுபாடு நாம் நன்கு அறிந்தது.

உட்கரணங்களுள் பிரதானமானது மனம். அறி யாமையினாலும் வஞ்சகத்தினாலும் மாசுபட்ட மனத்துக் கும் மாசற்ற மனத்துக்கும் உள்ள வேறுபாடு மிகப் பெரி யது. பார்வையுள்ளதும், அற்றதுமான கண் வேறுபாட்டி னும் மிக மிகப் பெரிய வேறுபாடு இந்த மன வேறுபாடு.

ஒருவன் மனத்துக்கண் மாசிலன் ஆதலைப் பெறுவானாயின் அது பல பிறப்புக்களிற் சம்பாதித்த தவத்தின் பயனேயாம். தூய மனத்திலே அறிவு சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

மனம் தூயவர்கள் சாத்திரங்களை உள்ளவாறு உணருகின்றார்கள். அன்றி. சாத்திரங்களால் அறிய முடியாத உண்மைகளையும் அறிகின்றார்கள். அவர்களு டைய அனுபவம், பிரத்தியடசம் முதலிய பிரமாணங் களுக்கு அப்பாற்பட்டது மேலானது. அவர்கள் சினிமா பார்ப்பது போலே, உலகத்தில் தோயாமல் உலகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இது நிற்க.

நமது உபஅதிபர் அவர்கள் அந்தர் முகநோக்குள்ள வர்கள் உட்கரணங்களைச் சுத்திசெய்வதிலேயே காலங் கழிப்பவர்கள். அவர் களுடைய மனந் தூயது. பிழை சரி - தர்மம் அதர்மம் -நீதி அநீதி- இவைகளை நடுநின்று ஆராய்ந்து தெளிபவர்கள் அவர்கள். அவர்கள் சிந்தனை நமக்கு எட்டாதது. அவர்கள் வரிசை வேறு.

‘அடக்கம் அமரருள் உய்க்கும்’

# 2 ஒரு மெய்ஞ்ஞானி வறுத்த வித்து

திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் B.A. [1890 – 1953]
(சைவாசிரிய கலாசாலை முன்னாள் அதிபர்)

திரு. பொ.கைலாசபதி அவர்கள் 1916ஆம் ஆண்டில் யான் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலைத் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்ற காலை அங்கு ஒரு மாணவனாகத் திகழ்ந்தார். அங்கே என்னுடனாசிரியராய் விளங்கிய ஒருவ*ரின் மதிப்புக்குரிய விசேட ஆற்றலும் சமயஞானமும் உடையவரானார் அவ்வாசிரியரையே தமது மெய்ஞ்ஞானக் குருவாகக் கொண்டு சைவசித் தாந்த சாத்திரத்தை ஐயம் திரிபற விளங்கி மேலான அறிவையும்: தாமே சந்தோஷப்படக் கூடிய உண்மை ஞானத்தையும் பெற்றார். சிறுவராயிருந்த கைலாச பதியை அவரின் குருவே தேடி அடைந்தார் எனினும் பொருந்தும். வேறுவிதமாகச் சொல்லப்புகின் விட்ட குறை, தொட்டகுறை இருவரையும் ஒருங்கு சேர்த்து வைத்ததெனலாம். மூன்று வருட காலம் யான் மல்லா கத்தில் படிப்பித்தேன். திரு. பொ. கைலாசபதி அவர் களும் அங்கே படிப்பித்தார்கள். அவரை ஓர் அதிவிவேகி யாகவே ஆசிரியர் அனைவரும் எண்ணி மகிழ்ந்தனர்.

முன் எனது மாணவராய் விளங்கிய கைலாசபதி அவர்கள் 1930ஆம் ஆண்டில் எனது உடனாசிரியராய் யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலையின் உப அதிப ராக நியமனம் பெற்றார். பத்து வருட காலத்துள் திரு. பொ.கைலாசபதி அவர்கள் ஒப்பற்ற விசேட ஆற்றலை யும் அறிவையும் மெய்ஞ்ஞானத்தையும் பெற்றுள்ளார் என்பதறிந்து வியப்படைந்ததுமன்றிப் பெருமைப்படும் நிலையையும் எய்தினேன். அன்று தொடக்கம் இன்று

---

* இரத்தினசபாபதி உபாத்தியாயர்

வரை அவர் எனது பழைய மாணவர் என்ற முறையில் எனக்கு மிகுந்த பயபக்தி காட்டி நடந்துள்ளார். யானும் அவரின் விசேட சமய அறிவின் பொருட்டும் அவர்மாட்டு அதே பயபக்தியையும் மரியாதையையும் காட்டி நடக் கத் தவறியது கிடையாது.

திரு. பொ. கைலாசபதி அவர்களின் போக்கும் இயல் பும் மிக வினோதமானவை. பழைய காலத்தவர்கள் ஓர் வறுத்தவித்து என்றும், பழுத்துக் கனிந்த பழம் என்றும் சொல்வர். இது அவரின் மெய்ஞ்ஞானவளர்ச்சி பற்றிய பேச்சு. அவரோடு நெருங்கிப் பழகினவர்கள் கூட அவரின் போக்கில் ஆச்சரியப்படு வார்கள். அவர் இருமுறை விவாகஞ் செய்தும், இரு பெண். குழந்தை களைப் பெற்றும் நித்தியப் பிரமச்சாரி போல் என்றும் விளங்கி வந்துள்ளார். அவர் லௌகிக விடயங்களில் அழுந்துவதில்லை. மனைவி மக்கள் இருந்தும் அவர் களை இல்லாதவர் போல் நடந்து கொள்வார். ஆனால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய ஒருபோதும் தவறமாட்டார். எனினும் அவர் வாழ்க்கை ஓடும் புளியம்பழமும் போன்றது. எதற் கும் அஞ்ச மாட்டார். நீதியீனத்தை எப்போதும் வெறுப்பவர். நீதி யற்ற சர்வாதிகாரத்துக்கு அடிபணியாதவர். உண்மை யெனும் திண்மை நிரம்பப் பெற்றவர். ஒரு பெருஞ் சான்றாண்மையாளர்.

# 3 இளமை நினைவு

திரு. வே. நடராசா அவர்கள் B.SC., B.T.
(மட்டுவில் க. வேற்பிள்ளை உரையாசிரியரின் மகன்)

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் பரமேசுவரக் கல்லூரி தன் கலாகிரணங்களை விரித்து, ஒளி வீசிய காலத்திலே நானும் என்போன்ற வாலிபர் சிலரும் படிப்ப தென்று கங்கணங்கட்டிக்கொண்டு, திருநெல் வேலிச் சிவன் கோயிலுக்குத் தெற்கே, பிரசித்திபெற்ற ஈரப்பலா வளவிலே கூடினோம். நமக்கு நாமே வழி காட்டிகள். பொழுது போகிறது தெரியாமற் போய்க் கொண்டி ருந்தது.

எங்கள் மத்தியிலே, புறனடையாக ஒருவர்-மிகவும் மிருதுவானவர்- உருவத்தாற் சிறியவர்- வந்து சேர்ந்தார். நானும் அவரும் பரமேசுவரக்கல்லூரியில் "இன்ரர் சயன்ஸ்" வகுப்பில் படித்து வந்தோம். புதிதாய் வந்து சேர்ந்த அவர் வெகு நூதனமானவர். எங்களுடன் சேர்ந் தும் சேராமலேயிருந்து வந்தார். "பயனில் சொல்' என்பது அவர் வாயில் வந்தறியாதது. படிப்பு நேரத்திலேதான், அந்தக் கூட்டத்திலே எங்களிடையில் வீணான சம் பாஷனைகள் கிளம்புவது வழக்கம். அந்த நேரங்களில் அவர் ஒரு மூலையில் குந்திக் கொண்டிருப்பார் நாங்கள் எங்கள் வீணான சம்பாஷணைகளில் கலந்து கொள்ளும் படி வலிந்து இழுத்தால் சிறிதே சிரிப்பார். அவ்வளவு தான் அப்பால் மௌனமாய்ச் சிந்தித்துக் கொண்டி ருப்பார்.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்றபடி அவர் கருமமே கண்ணாயிருந்தார். வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். எனக்கு அப்படியொன் றும் அவர்பால் தெரியவில்லை. தெரிந்து கொள்ளும்

மனப்பான்மையும் எங்கள்பால் இல்லை. அவரை "ஓர் உடல் வலியில்லாத ஏவலாளி ஆனால், நல்லதொரு விவேகி படிப்பாளி" என்று எண்ணியிருந்தோம். பொழுதை அவப்பொழுது செய்யாமல் தவப்பொழுது செய்து கொண்டு, எங்கள் மத்தியில் ஒருவராய் அவர் இருந்து வந்தார்.

அன்றுஞ் சரி, இன்றுஞ்சரி அவர் நிலையை அறியாமையால், அவர் முன்னிலையில் பல தவறுகள் செய்திருப்போம். அவைகளை அவர் பொருள் செய்வதில்லை. நட்புரிமை பற்றிப் பொறுத்துக் கொள்ளுபவர் என்பதே எனது கருத்து.

பழைய இளமை நினைவுகள் மிக நீளமானவை. அவைகளை மேலும் வளரச் செய்ய நான் விரும்பவில்லை.

அன்றொருநாள் எங்கள் மத்தியிலே மௌனமாய்த் தங்கருமமே கண்ணாயிருந்தவர் எவரோ அவரே இன்று நம் மத்தியில் நம்மதிப்புக்குரிய உபஅதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்கள் B .Sc.,

சமய சாத்திரங்களைப் பாடம் பண்ணிப் பெரிய சபைகளிலே இடிமுழக்கஞ் செய்பவர்கள் பலரை இந்த உலகத்தில் கண் நிறையக் காணலாம் ஆனால் படித்தபடி ஒழுகுபவர் ஒருவரைக் காண்பது அரிது.

திரு. கைலாசபதி அவர்கள் கற்கவேண்டியவைகளைக் கற்று, அதனாலே கசடுகள் அற்று, கற்றதன் வழி நிற்பவர். அவர் ஒரு சமயி. அவர் பெருமை போற்றுதற்குரியது.

மாத்திரம் கேட்கும் சொற்களினாலே பேசிக்கொண்டிருக்கிற, பிறரோடு பேச விரும்பாத மௌன தவமுனி.

# 4 சைவத்திருவாளர் பொ. கைலாசபதி அவர்கள்

திரு. த. இராமநாதபிள்ளை B.A. அவர்கள்
(வேலாயுத வித்தியாலய அதிபர், புலோலி)

சைவர்களைக் கனவுலகிலும் நினைவுலகிலும் காணலாமன்றி. நிலவுலகில் காணமுடியாத இக்காலத்தில் சைவப்பற்றுடையவராய்ச் சைவநெறி நின்று வாழ்தலே தம் வாழ்க்கையின் மகா நோக்கமென நிச்சயித்து வாழ்ந்து வருகின்றவர் திரு. கைலாசபதி அவர்கள் ஒருவரே என்று சொல்லலாம். புராதன தேவாலயங்களைப் புதுப்பித்தலிலும். அன்னதானம் அளித்தலிலும் பார்க்கச் சிறந்த தொண்டாகிய சைவநெறி நிற்றலையே அவர் நோன்பாகக் கொண்டுள்ளார்.

**அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்**
**அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை**
**அஞ்சும் அடக்கில் அசேதன மாமென்றிட்**
**டஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே.ா**

என்றவாறு அறிவறிந்து ஞானப்பாலுண்ட சைவத்திருவாளர் பொ. கைலாசபதியவர்கள் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் உபஅதிபராய் இருபத்தெட்டியாண்டு சேவித்தமையாலன்றோ, அது சைவஆசிரிய கலாசாலை எனப் புகழ்பெற்றுத் துலங்குகின்றது. இக் கலாசாலையில் கல்விமுறை பயிற்றலோடு நில்லாது வேதம், ஆகமம், புராணம், சைவசித்தாந்தம் என்பவற்றை அல்லும் பகலும் துருவித் துருவி ஆராய்ந்துணர்ந்த நுண்மாண் நுழைபுலமிக்க செம்மலையாம் போற்றுவோமாக.

**வேதம்பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்**
**ஓதுந் தமிழ் அதனின் உள்ளுறுநெய்-போதமிகு**
**நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய்மெய கண்டான்**
**செய்த தமிழ்நூலின் திறம்.**

என்னும் சான்றோர் திருவாக்கை உணர்ந்து திளைத்து சிவஞான மயமாய் அமர்ந்திருந்து, போலிச் சமய வேடம் பூண்டு அலமரும் மாந்தருக்குத் திகழொளி யாய் வழிகாட்டும் அவர் சேவை நற்சேவை யன்றோ? பொதுசனங்களின் வாக்கைப் பெறுவதற்கும் இம்மை யுலகில் தம் புகழை நாட்டற்கும் அவர் தத்துவ நூல்களை ஆராய்ந்தாரல்லர். அன்றியும் மேனாட்டார் போல் கலையின்பம் விழைதற்குத் தத்துவ நூல்களை அவர் தேடவில்லை. தத்-துவம்-அசி என்னும் மகாவாக்கி யத்தைச் சிந்தித்துத் தெளிந்து, அத்துவிதமே உண்மை யெனக் கடைப்பிடித்து உலகத்திருந்தும் உலகப்பற்றற் றிருக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த பெருமை திரு. கைலாச பதியவர்களுக்கே உரிமையாகும். அவர் இறைவன் அருள்பெற்று, இன்னும் பலகாலம் நம்மனோர்க்கு வழி காட்டுவாராக.

# 5 மௌன தவமுனி

பண்டிதை. த. வேதநாயகி அம்மாள்
(வேலணை)

1. உப அதிபர் அவர்கள் மெய்யின் வடிவம். பொய்களை வென்று வென்று கீழ்ப்படுத்தி வைத்திருக்கும் மெய்களின் உயிராகிய மெய் அது. மாயாவாத முதலிய சமயப் பொய்களை கீழ்ப்பட்டடங்கிய மெய் அது. விஞ்ஞானமாகிய சடஞானப் பொய் கீழ்ப்பட்ட சைவஞான மெய் அது.

2. உப அதிபர் அறிவுடையார் விரும்பி விரும்பிக் காணும் நூதனசாலை. அவர் கூறும் கருத்துக்கள், அவரறிந்த நூல்கள், அவர் கண்ட சிந்தனை முடிவுகள் ஆகியவை அறிவுடையார்க்கு ஆச்சரியம் கொடுப்பவை.

3. உபஅதிபர் அவர்கள் முனி. மௌனமுடையவர். "ஊமையென்னும் அதிஉயர்ந்த சாதகம் வாய்ந்த முனி. பேசப்பொருளலாப் பிறவி தன்னைப் பேசுதலறியாத முனி. தலைவனைக் கல்லாத பேய்களோடு பேசுதற்குச் சொல் இல்லாத முனி. பேசப்பெரிது மினிய தலைவனை தன் செவிக்கு மகானே, தாங்கள் ஒரு தரிசனவேதி. தங்கள் சந்நிதியில் நாங்கள் நமது துரிசுகளை ஒரு கணமாயினும் உணருகின்றோம்.

4. உபஅதிபர் உத்தியோகமும் B.Sc கல்வியும் அவருடைய நிலைக்கு மிகக் கீழுள்ளவை. தலைவனது ஆணை என்னும் ஒருணர்வினாலேயே அவர் உப அதிபர் உத்தியோகத்தை அருவருப்பின்றி, விருப்பத்தோடு தாங்கினார். அவரது பெரிய பெருமை அது

5. நாம் அவருக்குச் செய்யத்தக்க இதமான செயல் அவரிடம் அறியத்தக்க உண்மைகளில் ஒரு சிறி தாவது அறிதலும், அறிந்தவழி ஒழுகுதலுமேயாம். முனிவர்க்குச் செய்யுங் கடன் அதுவே.

* வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் மாணாக்கர் செ. கனகசபாபதிப்பிள்ளையின் மருகியான வேதநாயகியம் மாள் மிக்க இளமையிலேயே வித்துவான் ந. சுப்பையா பிள்ளையிடம் வேலணையில் படித்துப் பண்டிதையானவர். மிகப் பிந்தியே சைவ ஆசிரியகலாசாலைக்குச் சென்றவர். சி. க. என்ற சந்திரனுக்கு ஒளி கொடுக்கும் சூரியன் என உபஅதிபரைப் போற்றினார். அவர் சில புதிய விடயங்கள் இவருக்குத்தான் கூறியதாக அறிகிறோம்.

இவரை பற்றி யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை. மாணவி (2010) ஆய்வு செய்துள்ளார். அந்நூலை அம்மாவின் உறவினர் அச்சியற்ற ஏற்பாடு செய்கின்றனர்.

# 6 வாழ்த்துப்பாடல்கள்

பண்டிதர் திரு. சு. இராசையா அவர்கள்
(தமிழ் விரிவுரையாளர், அரசினர் மகளிர் கல்லூரி, கோப்பாய்)

1. செந்தமிழுமாங்கிலமுந் தேர்ந்து மேலாஞ்
சித்தாந்த சாகரத்திற்றிளைத்த யோகி
அந்தமிலாச்சிந்தனையி லாழ்ந்த தோன்றல்
அளவெட்டியெனும் பதியிலெழுந்தஞானி
எந்தமுளம் விட்டகலான் எதிலும்வல்லான்
எமது கலாசாலைக்கோரச் சாயுள்ளான்
சந்ததமுங் கலையமுத முண்ணுந்தேவன்
கைலாச பதியென்னு நாமன்வாழி.

### கட்டளைக் கலித்துறை

2. கற்றார்க்கொருமுதல்கைலாசநாமன்கருவிந்து
பெற்றாரெனலெமைப்பேணிக்கலையமு தீந்தபிரான்
முற்றாமதியணி வேணிய னார்பதம் வேண்டலன்றி
மற்றோர்பொருளினைவெ∴காதஞானிநன்மாதவனே.

பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்கள்
(பத்திரிகாசிரியர் : ஈழதேவி, சித்தன்கேணி)

### கட்டளைக் கலித்துறை

1. உத்தமநீதியைச் சைவநிலையை யொழுக்கமிகு
வித்தகவாக்கை விளங்கிடுமுன்றன் விதரணத்தைச்
சத்திய நீர்மையைச் சாந்தக்தையன்றித் தவாதபரி
சுத்த மனத்தை நினைக்க நினைக்கச்சுகந்தருமே.

2. தருக்க வுரையின் தவஞான மாமுனி தாமெனவோ
சுருக்கவுரையிற் செகம் புகழ்வள்ளுவனைச்
சொலவோ
அருக்க னெனமிளி ராசிரி யர்களை யாக்குதலிள்
திருக்கயி லாச பதியிங் குனக்கெவர் தாநிகரே.

இருபத்தெட்டு வருடம் உப அதிபராய் இருந்து இளைப்பாறிய
திரு. பொ. கைலாசபதி B.Sc. அவர்களுக்கு
பழைய ஆசிரிய மாணவ, மாணவிகள் சமர்பித்த

# 7 உபசாரப்பத்திரம்

ஆன்று அமைந்து அடங்கிய சான்றிர் அரும் பெருங் குரவீர்! ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரிய மாணவ மாணவிகளின் ஆராமைமிக்க அஞ்சலியைத் தங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கின்றோம். தங்கள் திருவடிக்கு இலக்காய் ஒரு சிறிது காலமாயினும் நாம் ஒவ்வொரு வரும் வாழ வாய்த்ததை, நமது வாழ்க்கையில் கிடைத் தற்கரிய பாக்கியமாகவே கருதுகின்றோம்.

ஆழ்ந்து அகன்ற தங்கள் அறிவின் நுண்மையையும், ஆத்மீக வாழ்வின் செம்மையையும், நாம் அளந்தறிய வல்லோம் அல்லோம். ஆயினும், மௌனத்தோடு கூடிய தங்கள் ஒழுகலாறு, அசைவற்றதொரு கலங்கரை விளக்கமாய், நாம் உழலுகின்ற நெறியில்லாத நெறி களை நமக்கு எடுத்துக்காட்டி நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

மகானே,

தாங்கள் ஒரு தரிசனவேதி. தங்கள் சந்நிதியில் நாங்கள் நமது துரிசுகளை ஒரு கணமாயினும் உணருகின்றோம்.

அருட்செல்வமே,

தாங்கள் ஒப்பற்றதொரு குணக்குன்று சால்புக்கு இருப் பிடம். தங்கள் அந்தகரணங்கள் மகா புனிதமானவை. மறந்தும் பிறன்கேடு சூழாதவை.

பெருந்தகையே, சமன் செய்து சீர்தூக்குங்கோலாய், மேன்மை கொள் சைவ நீதியாய், இச்சைவாசிரிய கலாசாலையில் அமைந்த தொரு உரைகல்லாய், தாங்கள் திகழ்ந்தீர்கள் திகழு கின்றீர்கள், அவ்வாறே தங்கள் ஆத்மசக்தி என்றுந் திகழ்வதாக.

எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கித் தாங்கள் எளிவந்ததாகிய இது சாதாரணமன்று. இதனால் எங்கள் வாழ்க்கை புனிதம் எய்தியது.

தங்களுக்கு அரோக திடகாத்திரத்தையும் ஆயுளை யும் அருளி, தங்கள் சாதகங்கள் மேலும் மேலும் அபி விருத்தி எய்துமாறு, எல்லாம்வல்ல இறைவன் திரு வருளை வேண்டுதல் செய்கின்றோம்.

எங்கள் குறைகளைப் பொறுத்து, எங்கள் வணக் கத்தை ஏற்று, தங்கள் அருமந்த ஆசியை வழங்குமாறு பிரார்த்திக்கின்றோம்.

தயாநிதியே,

தங்கள் ஆத்மஞானத்தில் ஒரு சிறு துளியைப் பரிசிப் பதற்காவது, நாம் பாத்திரம் ஆவோம் ஆக.

வணக்கம்

| | |
|---|---|
| சைவாசிரிய கலாசாலை, | தங்கள் அன்புள்ள |
| திருநெல்வேலி. | பழைய ஆசிரிய மாணவ, மாணவிகள் |
| 23.04.1958 | 1930 – 1957 |

# 8 சிந்தனை அமுதத் துளிகள்

இ. கிருஷ்ணபிள்ளை தொகுத்தவை
( முன்னாள் ஆசிரியர். இடைக்காடு மகா வித்தியாலயம்.
வசாவிளான் மத்திய கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம்)

**தாட் பால் வணங்கித் தலை நின்றி இவை கேட்க தக்கார்
ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டர் சுடர் விட்டுளன் எங்கள் சோதி**

- சம்பந்தர் தேவாரம்

**காலமும் பக்கங்களும் பொ. கைலாசபதி சிந்தனைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (1994) காட்டும்
முறைப்படி குறிக்கப்பட்டன.**

சாதகம் இதுதான். எல்லாரும் நல்லாயிருக்க வேண்டு மென நினைத்தல். (நான் அல்ல இவர்களுக்கெல்லாம் பொறுப்பாளி. திருவருள் நடத்துகிறது என்பதை உணர் தலே ஞானம். கதிக்கு வழியதுவே.)

பற்றுள்ளவர்களுக்கு இரங்குதல். எல்லாரும் வாழ வேண்டுமென்ற கருத்தில் கொஞ்சம் சரி. அதனாலே தான் வேதம் அவனை செல்லுமாறு கூறித்தான் உடன் வென்றது. அதில் பிழை என்னவெனில்,

வரிசை, மானம், விலைதெரிதல் வேண்டும். தன் பட்ச முடையார் வரமுடியாத இடமோ இது என வேதம் குறிப்பிட்ட இடத்தைப் பற்றி நினைத்து வேத விரோதம் அதற்குத் தண்டனையாக போ என வேதம் கூறியது.

அரவிந்தகோஷ் மிகப் பெரிய காரியங்களை யோசித் தவர் ஆனால்' வேதம் அழைக்கப்போகும் முறையில் நம்பிக்கையில்லாதவர். (மிக இளமையில் தான் இப்படிக் கூறினார் * பின் எப்படியோ தெரியாது) "அது Selfish முக்தி I don't want that Selfish Mukti" என்றார்.

* 1910 - 20 வரை புதுவையில் சுதந்திரப் பணியை இந்தியா வில் 100 இடங்களில் தொடங்க எண்ணியிருந்தார் "கர்ம யோகி" (பக் - 215-பக் 216)

வேதம் தெரியாமல் காட்டு முனிவரை வெறுத்து. அரவிந்தர் கூட தன்காரியம் பார்க்கு முத்தி வேண்டாம் என்று தொடக்கத்தில் சொல்லிவிட்டார்.

குரவர்கள் : இவர்கள் கண்டு சொன்னவர்கள். காணாமை தான் இப்போது விருப்பம். அதற்குச் சாத்தி ரோக்தம் வாய்ப்பு. வேதாகமமென்று சொல்லிக் கொண்டு இருக்கலாம்.

பக்கம் 2
1941

**கற்பு ஆன்ம நாயகரை நிந்திக்காது பிறிதொன்றைச் சிந்திக்காது நிந்தனைக்குச் செவிகொடாது.**

20.2.1941 பக்.7

### ஒருவனை அறியுமாறு

1 அவனது உயர்ந்த செயல்.இது புகழ்தற்கு உரியது. ஆனால் அது அவனுடன் சேர்தற்கு உரியது அன்று.
2 பொதுவான ஒழுகலாறு சாதாரண நடை. அவன் எப் பொழுதும் கண்ணியமான காரியங்களையே செய் வான் என்பது போன்றது. இது மதித்தற்கு உரியது. ஆனால். இதுவும் சேர்தற்கு உரியது அன்று.
3 இழிவு இவன் எவ்வளவு தூரம் இறங்கத்தக்கவன் என்பது. இது சாதி (வருணம்) கொண்டே நிச்சயிக் கத்தக்கது. இக்காலத்தில் சாதி இல்லை. அதனால் ஒருவனை நம்பலாகாது. என்னை? அவன் எவ் வளவுக்கு இறங்குவான் என்று தெரியாது ஆதலின்.

இம்மூன்றையும் சேர்த்து **குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி** மிக்கவற்றால் கொள்வதும் ஒரு முறை.

**நல்ல போக்குள்ளவர்களிடம் அன்பு வைப்பதுதான் இக்காலத்தில் வருணமாகலாம்.**

நல்ல போக்குள்ளவர்கள் என்று ஒருவரை நிச்சயிப்பது எளிது. அவருடைய அறிவின் நிலையை அறிவது அரிது.

**நல்லபோக்குள்ளவர்களின் அறிவின் நிலையை அறிந்து, அவரைத் தொடர்ந்து வாழ்வதுதான் இக்காலத்தில் ஆசிரமமாகலாம்.**

1.3.1941 பக்.14

**சித்தாந்தம் சித்திக்க வழி 3 :**

1 ஒருவன் முதலில் வஞ்சகத்தை விட வேண்டும் நோக்கம் சுத்தமாதல் வேண்டும்.

2 பொறாமையை விட வேண்டும் நன்மையை அஃது உள்ளவனிடத்துப் பெற, அவனை மேலாக மதிக்கப் பயில வேண்டும்

3 பிழையான பிடிகளை அறிந்த மாத்திரை யானே உதறிவிடல் வேண்டும். இம்மூன்றையும் விட்ட வழியே சித்தாந்தம் சித்திக்கும்

இவை இ. கிருஷ்ணபிள்ளையின் மகளால் நூல் வடிவில் - தொகுத்தும் விரித்தும் வெளியிடப்பட்டுள்ளது. (2010)

---

1 ஆன்மாவில் ஆண்மை பெண்மை என இரு அம்சங்கள் உள. தன் இயல்பு, சாதக மார்க்கம் பற்றி இரண்டில் ஒன்றின் குணத்தை வளர்க்கலாம். பெண்மை பிறந்த ஆன்மாவே போகம் எங்குள்ளது எனக் காணும். (போகம் √புஜ் என்ற வினையடி யாகப் பிறந்தது. ஐம்புலன்களால் நுகர்தல் முதல். அந்தக் கரணங்களால். நுகர்தல். ஈற்றில் ஆன்மா யாதொரு கரணங் களின் உதவியும் இன்றி. அத்வைதப்பட்டு நின்று பேரின்பம் நுகர்தல் எனப் பல்வேறு தளங்களில் நுகர்ச்சி .உண்டு. (பார்க்க: 1சிவஞானபோதம். 11.2: ஏகமாய் நின்றே இணை யடிகள் ஒன்று உணரப் போகமாய்த்தான் விளைந்த பொற்பினான்

2. சிவஞானசித்தியார்: பரபக்கம். செய்யுள் 3ல் "பெரும் போகம் அவை அளித்து"

11.3.1941 பக். 17

பெண்மையின் நோக்கம் போகம் (அநுபவம்)
ஆண்மையின் நோக்கம் மானம் (பெருமை)

10.5.1951 பக். 149

| | |
|---|---|
| ஆண்பெண்சாதகம் | இயற்கைஅமைப்பின்படி |
| ஆண் குணம் 4 | பெண் குணம் 4 |
| அறிவு | மடம் |
| நிறை | நாணம் |
| ஓர்ப்பு | அச்சம் |
| கடைப்பிடி | பயிர்ப்பு |

கர்ம ஒப்பு கர்மச் சுழல் ஆகியவற்றுடன் இவற்றைப் பொருத்திக் காட்டுவது பொ.கை. சிந்தனையில் அதிக சிறப்புடை்யது .

16.3.1941

**அறிவு நமக்குக் கருவியன்று அறிவுக்கு நாம் கருவி. அறியாமை மாத்திரம் தான் தீமைக்குக் காரணமன்று நன்மையை விரும்பாமை தான் பிரதான காரணம்.**

1. பற்றுள்ள வழி மானந் தெரியாது வரிசையறிந்து மதிக்க முடியாது.
2. பிழையைச் சரியென்று அலைந்து பின் அறிவதாலும், பிழை சரிகளை அறியும் உணர்வினாலும் திருத்தம் உண்டாகிறது.
3. தனித்து நிற்க மனிதர்கள் அஞ்சுகின்றார்கள். அதனாலே தான் பாத்திரமல்லாதவர்களையும் பற்றுக் கோடுகளெனப் பற்றிக் கொள்கிறார்கள்.
4. தர்ம விதிகளை அநுட்டிப்பதில் செய்யும் முயற்சிகளும் பிழையான பற்றுக்களை நீக்குகின்றன.

அநுட்டிப்பதால் ஏற்படும் சுகம் கைவந்த வழி பற்றுக்கள் தாமே மறைகின்றன. இச்சுகம் கைவந்தவர்கள் பற்றுக்களை, தர்மங்களை அநுட்டிக்கக் கட்டப்படுவது போலப் பிறருக்குத் தோன்றலாம். உண்மையில் அப்படியில்லை.

5. பற்றுக்கள் இருக்கவும் அவை பிழைவழிகள் என்று விலகி, தர்ம வழியை அறிந்து நடக்க முயற்சிக்குங் காலமே கஷ்டகாலம். இது பிறருக்குப் புலப்படாமலுமிருக்கலாம்.

1.3.1941 பக். 13

முதல் வாக்குகளைக் காணவேண்டும் அதன் மேல் பெரியோர்களினியல்பை அறியவேண்டும். இவை நல்ல மார்க்கத்திற்குச் செல்வதற்கு வழிகள். வாக்கென்றது விதி விலக்குகள்.

(விளக்கம்) வேதம் விதிவிலக்குகளைக் கூறுவது. அது வாக்கு விதிவிலக்குகள் சமுகதேவைக்காகக் காலந் தோறும் கற்பிக்கப்பட்ட சமயோசித சட்டங்கள் அல்ல. மந்திர திருஷ்டாக்கள் (வாக்குகளை அறிந்தவர்கள்) கண்ட உண்மைகள். அவை ஸ்மிருதி, புராணங்களில் விரித்துரைக்கப்பட்டன.

1.4.1952 பக் 241

("எனது" காசிபருக்குமுண்டு கட்சி, ஒக்கல், ஆர்? உண்மை ஒக்கல் ஓம்பத்தக்கது. பிறகு அதுவும் விடுபடும்.) கிருஷ்ணன் ஒக்கல்?

**விளக்கம்**

1 கந்தபுராணகதையிலிருந்து சான்று காட்டுகிறார்.
"எனது" கிடந்தபடியால் தம் பிள்ளைகள் என்ற பற்றினால் "தருமம் என்று ஒரு பொருள் உளது" எனப் போதித்தார். தாயாகிய மாயை பிள்ளைகளைத் தன்வசப்படுத்திச் சுக்கிராசாரியாரிடம் அழைத்துச் செல்லவே, அதுவும் விடுபட்டது போதும். ஓம்பத்தகாத ஒக்கல் பிறப்பினால் வந்த ஒக்கல் எனக் கண்டதும் அதுவும் விடுபட்டது. பின் அசுரர் தலைவர்கள் ஒக்கலன்று எனக் கண்டு தேவரின் நலனில் அக்கறை செலுத்தினார்.

2 பாண்டவர் கிருஷ்ணனை ஒக்கல் எனக் கருதினார். பெரிய தந்தையின் பிள்ளைகளை அல்ல

அமிர்ததள ஆரம்பம் உள்ளீடு. அன்னமயம்: "நான்"

தென்புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (குறள் - 43)

அடுத்தது பிராணமயம்: "எனது" (ஒக்கல்)

பிறப்பொக்கலில் தான் பற்றுக்கிடக்கிறது. பெரியோர்க்கு உண்மையொக்கல் தான் ஒக்கல்.காசிபருக்குத் தேவர் ஒக்கல்.
- கந்தபுராணம்.

பக்.21 20.3. 19.41.

இக்காலத்தில் ஞான சாதகமே முதற் கொள்ளக் வேண்டியது. அறிந்த அறிவைக் கொல்லாது நடக்க வேண்டும்.

கொலைகளில் பெரிய கொலை அறிவுக் கொலை கொன்று சடமாக்கிய அறிவு ஒருவனை உயர்த்து வது எங்ஙனம்?

19.3.1941. பக். 20

தீமைக்குக் காரணம் ஆணவத்தின் குணமாகிய அறியாமையும், கர்ம சந்தர்ப்பங்களுமே என்று சொல் லித் தப்புவது தவறு. விருப்பு வெறுப்புக்கு அதிகாரி ஆத்மா.

பக். 21

விருப்பு, வெறுப்பு ஆன்மாவுக்கு இயற்கையாவுள் ளவை. அவற்றை ஒவ்வோர் கால் அறியாமையுந் தூண் டும் அறிவுக்கறிவாகிய அருளுந் தூண்டும். இணங்கு தல், உடன் போதல் ஆன்மாவைப் பொறுத்தது. ஒக்கல் + ஒக்கல் ஆர்? உண்மை ஒக்கல் ஓம்பத்தக்கது. பிறகு அது விடுபடும். "துனியில் காட்சி முனிவர்."

- திருமுருகாற்றுப்படை

முதலாவது ஆரண்யகம் வாக்குச் சுத்தத்தை அறிவது. இது கைவந்தவன், அன்னம் போல் நூல்களின் உண்மையை அறிவான். இரண்டாவது ஆரண்யகம் பெரியோர்களின் போக்குகளை அறிவது. இது கைவந்த வர்களுக்கு பெரியோர்களில் கட்டி நடத்து கிற பொய்க் கதைகள் புறம்பாகத் தோன்றும். இவ்விரண் டும் கைவந்தவர்கள் மூன்றாம் ஆரண்யமாக ஆகமங் களை அறிய வல்லவர்.

22.3.1941 பக். 23, 24

சுதந்திரம்:- பிறரைத் தீண்டாதது அவரால் கட்டுண் ணாதது.

அன்பு சடம் இது முன்னிலைப் பொருளைச் சடமாகவே நோக்கும். மனத்துக்கு நோக்கம் திருப்தி. அது தன் திருப்திப் பொருட்டும், முன்னிலைப் பொருளை உயிர்ப் பொருளாக நோக்காது. உயிர்ப் பொருளாக நோக்குவது அறிவு. அது மனம் அடங்கிய வழி தொழிற்படுவது. அதனைத் தர்மம் நடத்தும். மனந்தூய்மையான வழியும், அதன் குணவிசேடங்களும் சடமே. இங்ஙனம் தூய்மை யான வழியில் திருப்தி பிறந்து மனமடங்கிய வழியே அறிவு தோன்றும். மனம் இறவாவழி அறிவு நிலைக்காது.

பக். 24

தத்துவம்:- ஆன்மாவைச் செலுத்தும். தத்துவத்தை மூர்த்தியும் மூர்த்தியை அட்சரமும், அட்சரத்தை எழுச்சி யும் செலுத்தும். தர்மத்தை அறியாதவன் அவனைச் செலுத்தும் மூர்த்தியை உணரான்.

பக். 28

**தமிழன்:- அன்பை - கற்பை அறிந்தவன்**

**ஆரியன்:- வீரம் - கொடை அறிந்தவன்.**

இவை ஆன்மீக அடிப்படையில் வழங்கிய சொற்கள். இன நிற பொருளில் 19 ஆம் நூற்றாண்டின் பின்னரே பிறழ்வாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன. (ஒப்பு) "ஆரியன் கண்டாய் ; தமிழன்கண்டாய்" அப்பர்

பாஷை சொல்லைப் பற்றியதன்று. நடையைப் பற்றியது.
நுதலிய பொருள் இரண்டு வகை:- அகம், புறம்.
அகம்: இன்பம் நுதலிற்று அநந்நியப்பட்டுக் காண்டலின் அகமெனப்பட்டது, அகம் இரு வகை:- 1. களவு, 2. கற்பு, ஐந்திணைகள் களவிலும் வரலாம் கற்பிலும் வரலாம்

புறம்:- அநந்நியப்படாது தானேயாய் நின்று, மற்றொன் றின் பெருமை முதலியவற்றைக் காண்பது.

பொருளறிவின் முதிர்ச்சியில் உண்டான அமைதிப் பாடே தமிழ்.
தமிழ் பொருள் நிரூபணம் செய்ததெனக் கொண்டு ஆராய்வது தவறு.

ஒருவர் கூறிய தமிழ் நோக்கி,அவரெய்திய பொருள றிவின் முதிர்ச்சியை ஆராயலாம்.

மண் தின்ற பாணம் என்ற வாய். இதில் மண் திண்ற பாணம் என்ற தொடர் காளமேகத்தின் பொருளறிவின் முதிர்ச்சியை இரட்டையர்க்குக் காட்டியது.

**அண்டத்தின் கூறே பிண்டம். பிண்டத்தை அறிந்தவன் அண்டத்தை அறிகிறான். அண்டத்தை ஆராய்கிறவன் இப் பிண்டம் எங்கிருந்து எப்படி வந்தது என்று ஆராய்கிறான்.**

தர்மம், அர்த்தம், காமம் மோட்சம் ஒன்றில் ஒன்று உயர்ந்தவை. உரையாசிரியாகள் ( பரிமேலழகர் கூட) சமணப்போக்கில் அர்த்தம், காமம் இழிந்தவை என்பது பிழை.

3.31952

பக்222

(காம நோக்கு) காம நோக்கு விட முடியாமை. சகல தமிழும் அருட்குண வெளிப்பாடு. அதனுள் ஒரு வகை முத்தமிழ் -ஏழுதிணையும் காமத்தைப் பொருளாகக் கொண்டது: முத்தமிழ்.

வாகடத்தமிழ் --- இயல்
புராணத் தமிழ் -- இயல், இசை
முத்தமிழ் -- இயல் ,இசை, நாடகம்
(காம தளத்தில் நடக்கும்)
பண்படுத்தும் இன்னும் ஒரு அம்சம். நாடகத் துக்கு மூலம்.
(பண்ணுக்கு ஆடவேண்டும்) சந்த நிலையில் பண் தமிழ் அன்புக்கு வேத விதி கற்பு.

1) எது புணரத் தக்கதோ. தீண்டத்தக்கதோ-தீண்டுகிற யோக்கியதையை நான் அடையவேண்டும். (கற்புச் சாதகம்)

2) தேக அமைப்பு. பெண் ஆர் திண்டுவானோ, அவனி டம் இயற்கை தானாகவே செல்லும். (வேதம் தெரியா விட்டால் உலகியல் தெரியாதாம்)
கற்பைச்சாதிக்க என்ன செய்யவேண்டும்? தக்க ஒரு வனை அன்றி மற்றொன்றைத் தீண்டாமை. (ஒரு வனைப் பற்றி ஓரகத்திரு). புருஷன் ராமனேயாயினும் வேறு ஒருவனிடம் மனம் செல்லப் பார்க்கும். செல் லாமை சாதகம், உண்மைத்தீண்டற்கு.

3.3.1952

பக். 220

யாப்பறிபுலவர். எழுவகை யாப்பு *
நூல் வந்த விதம் நோக்குவார்க்கு யாப்பினருமை விளங்கும்

பிசியைச் சேர்ந்தது இலக்கிய யாப்பு
அர்த்த-சம்ஸ்காரம் இலக்கியம்
(பிசி யாப்பு விளங்கினால் இலக்கியப் போக்கு அறியத் தக்கதாகலாம்.)

பக்-434

ஒரு தூய்மையில் பொருளமைதி இருந்தபடி இலக்கியம். இலக்கியம் கேட்போரின் எழுச்சி, நொடி அவிழ்ப்பவரின் எழுச்சி போன்றது. மனித சீவியம். நோக்கம் இங்ஙனம் அமைய வேண்டும் என்று காண்பது அதற்கேற்ற யாப்பு. அவிழ்க்கிறது நோக்கு .பா. ஓசை (Poetry) வேறொரு பூமிக்கு எடுத்துச் சென்று, அநுபவிக்கச் செய்கின்றது, பரவுகின்றது.

காமத்துறை 7 திணை 7 யாப்பு

பெருந்திணை பா; கைக்கிளை (வாய்ச்சொல்) பழமொழி. (ஏனையவற்றைக் கிரமம் செய்க.) இலக்கியத்தில் (Literature) பாவிற்போல் இழுப்புண்ணுவதில்லை. நின்றபடி நின்று காணுவது ; அவிழ்ப்பது. நூல் யாப்பில் அதற்குள் ஏதோ இருக்கின்றதென்ற உணர்ச்சி.

---

* எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பு என மொழிப. யாப்பு அறி புலவர்
தொல்காப். செய்.74

பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ் ஏழ் நிலத்தும்
வண் புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின்
நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்
- தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுள்75.

உலக வழக்கிற் கண்டதைச் சுத்தமாக எப்படியிருக்கும் என்ற பாவத்தில், காண வேண்டும் ; சுத்த உருவைக் காண வேண்டும். அதற்குப்பிரமாணம் நூல். இலக்கண முகமாக இலக்கியங் காண்பது.

பக். 606

24.11. 55

முல்லை:- அவள், (சொல்லுகிறாள்) அவர்தான் வேறொ(ருவ)ரை நினைக்கவில்லை. அவர் புனிதம் என்ன! "அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்" இந்தத் தேகத்தோடு தீண்ட நினைப்பதெங்ஙன்? அ(வ)ரைத்தான் வேணும். தீண்ட நினைப்பதெப்படி? என்னைச் சுட்டு எரித்து, மாற்றிச் சேர்க்கட்டும் என்று உபாசிப்பாள். சுடுக என்று உபாசிப்பாள். சுடும்வரை இருத்தல். (சீதை: அக்கினி) ஏற்றுக் கொண்டது.

நந்தனார்: அக்கினி ஏற்றது.

இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல் வியாகரணம். ஒருகாலத்தில் ஆராய்ந்த துறை திரளும். அதற்குப் பெயர் வரும்.

பக்.28

30.6.41

திருக்குறள் ரீதி வேறு, ஸ்மிருதி ரீதி வேறு, பின்னையது சட்டம் முன்னையது சட்டப்படி ஒழுகுவோரின் அமைதிப்பாடு.

அறன்வலியுறுத்தல் முதலிய பாயிரம் மூன்றும் எதிர் நிரனிறையானே மூன்று அதிகாரமும் நுதலிய பொருளாம்[1]

அறம்-----அறன் வலியுறுத்தல்

பொருள்----நீத்தார் பெருமை

இன்பம்-----வான் சிறப்பு

வீடு------கடவுள் வாழ்த்து

நான்கு புருடார்த்தங்களையும் எதிர்நிரல் நிறையானே பாயிரத்திலுள்ள நான்கு அதிகாரங்களும் விளக்கும் என்ற புதிய விடயத்தை விளக்கியமையும் "பொ. கைலா சபதியும் பொருளாராய்ச்சியும்" - ச.பரநிருபசிங்கம் பக். 7, 8ல் வருகின்றன.

**பாரதத்தில் தர்மர் சூதாடினார். சரியா? இதற்கு விடை**

சூது நன்மைக்குத்தோன்றிய குறிப்பு ஆகலாம். முனிவரின் பெருமையை தெரிந்தவர் தர்மர், இராச்சிய ஆசையும் உண்டு.

இதிகாச புருஷர்களின் அடிப்படை வித்தை உடன் போக்கு. அந்த அந்தச் சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. சில கந்தோரில் கட்டாயம் லீவு எடுக்க வேண்டும். இராமர் தருமர் ஆதியோரின் லீவு அப்படிப்பட்டது.

நன்றிக்கும் ஈகைக்கும் இடையிலுள்ளது *[1]ஒப்புரவு நன்றி உதவி செய்தவர்கள் மாட்டு இருப்பது ; ஈகை யாசிப்பவர்களுக்குக் கொடுப்பது. ஒப்புரவு உதவியும் யாசிப்பும் இல்வழி நிகழ்வது.

ஈகை பெறுவோரைக் கட்டுப்படுத்தாதது எச்சிற்படுத் தாதது. நளன் முதல் வள்ளல், தமயந்தியிடம் தூது சென்றவன். தன் இச்சையைத் துறந்து சென்றவன்.*[2]

---

*[1] நன்றி, ஈகை திருக்குறள் அதிகாரங்கள் 11, 23 இவ்விபரம்:
1. திருநெல்வேலி சந்தி இந்துவாலிபர் சங்கத்தில் (சாதாரண மக்களுக்கு) கைலாசபதியவர்கள் பேசிய விடயமும்,
2. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் (சபையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பேனையும் கையுமாய் இருந்தலைக் கண்டு இப் புதிய கருத்தை கூறினார்.)

**கோயில்கள் நான்கு வகை**

1. முடிந்த ஞானத்தைத் தழுவிக் கொண்டிருக்கிற இடம் ஒரு வகைக் கோயில்.
   முடிந்த ஞானத்தை எட்டக்கூடியவைக்குத் தெரியும் (சித்தர்கள், தெய்வங்கள், யோகிகள் போவர்)
   சிருஷ்டித் தலம் ஒரு காலம் காடு, ஒரு காலம் கடல்[1] பின் நாடு.
   இவற்றை ஞாபகமாக இன்ன இடத்திற் கோயில் கட்டலாம் என்று முறைப்படி கட்டினது.
2. ஞாபக ஸ்தலம் : சிதம்பரம்.
   சாத்திரங்கள் சொன்னபடி சார்பு அமைந்திருக்கோ எனப் பார்த்து பிரதிஷ்டை பண்ணின தலங்கள்.
   ஞானநோக்குத் தெரிந்தவர்கள் தான் இதைக் கண்டு வழிபடக் கூடியவை.

1. புகழேந்தி நளவெண்பாவில் "கோதாயினான்" என்று குறிப்பிடுவது மிக முக்கியமானது நைடதத்திலோ, வடமொழிப் பாரதம் நளோபாக்கியானத்திலோ இல்லாதது. நான்கு தேவருக்காகத் தூது போகும் போது, தன் நெஞ்சில் காதல் உணர்வு இருந்தால், அவ்வெண்ண அலைகள் தமயந்தியின் முடிவைப் பாதிக்கலாம் என்று அஞ்சித் தன் நெஞ்சைக் கோதாக்கிக் கொண்டு, தன் தூதுக் கடமையில் ஈடுபட்டானாம். அதனால் (தன் இச்சையை, காதலை தியாகம் செய்த வள்ளன்மையால்) தலை எழுவள்ளல் வரிசையில் இடம் பெற்றான். சுந்தரர் "கொடுக்கிலாதானைப் பாரியே" என்று குறிப்பிட்ட பாரி கூட கடையெழு வள்ளல் வரிசையில் உள்ளவனே (பார்க்க: சி.க எழுதிய கட்டுரை "நளன் தூது நாடகம்" செந்தமிழ்க் களஞ்சியம்.
2. ஏணாணில்லாநாயினேன் (திருச்சதகம் 88)
   * அலவா நிற்கும் அன்பிலேன்
3. காணுதல் சாதகம்
4. அடையவேண்டிய சந்தர்ப்பத்தை வேண்டி நிற்றல் (இக்காலத்தில், சாதக முதற்படி)

* "உனைக்காண்பான் அலவா நிற்கும் அன்பு
இலேன் என் கொண்டு எழுகேன் எம்மானே"
(திருவாசகம், திருச்சதகம் - 58)

3. காமநோக்குச் சம்பந்தமானது - திருக்கோயில் ஒரு நாட்டுக்கு ஒருகோயில் வேணும் என்ற முறையில் முறைப்படி பிரதிட்டை பண்ணின கோயில் ("திருக் கோயில் இல்லாத திருவில் ஊரும்" - அப்பர் காமநோக்குள்ளவன் இப்படிக் கோயில் இல்லாத ஊரில் இருக்கச் சம்மதியான்.

4. நல்லார்வம் உள்ளவர்களுக்குத் தெரிகிற கோயில் - சிலபலசித்தி என்றமுறையில் ஒரு மரத்தடியில் வைக்கிறகோயில். அவரவருக்குத் தெரிந்த முறை.
கண்ணப்பர் - இறைச்சி படைத்துப் பூசை
சிவகோசரியார் - சுத்தி செய்து பூசை

**மூடநம்பிக்கை**

ஞானதளத்தில் நாலு துறைகள் உள.
முதல்துறை தெரிந்தால், மூடநம்பிக்கையின் மூலந் தெரியும் (பல்லி சொல்கிறது) பிராணன் எங்குமாய் நிற்கிறது. மனுஷரில் பிரிந்து தெரியவில்லை. (புத்தி கூட). பிராணிகளில் தொழிற்படும் ; குறியைக் காட்டும். பிராணன் சுத்தியானவன். அது சொல்கிறது விளங்கு வான். விளங்கினவன் சொன்ன குறிப்பை, சோதிடத் தோடு பாராட்டுவார்கள். பிறழ்ச்சி மூடநம்பிக்கை. (ஞானத் தின் முதற்பாதம் மூடநம்பிக்கை தெரிகிறது).

ஆழ்வார் பல்லியை விளித்துப் பாடுகிறார்.
சங்க இலக்கியச் சான்று
பகுவாய்ப் பல்லி பாடு ஓர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி அகம்:88
மையல் கொண்ட பதன் அழி இருக்கையள்
பகுவாய்ப் பல்லி --- காறும் பரவி

---

[1]திருத்தோணிபுரம் கடல்மூடாத சிறப்புவாய்ந்த ஸ்தலம். திருக் கேதீச்சரம், திருக்கோணேச்சரமும் அப்படிப்பட்டவை ஆகலாம்.

**பல்லி சொல்லலில் நம்பிக்கை**

பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன நல் எழில்கலி.11
முதைச்சுவல் மூரிச் செந்தினை ஓங்கு வணர்ப்பெரும்
குரல் உணீஇய பாங்கர்

**மூடநம்பிக்கைகளின் மூலம் விளங்கும்**

தொல். களவியல் சூத் இகந்த ஒழுக்கத்து
ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கில்லை" (விளக்கம்)

**தொல். புறத்திணை**

"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்" புறம் 124
"நாள் அன்று போகிப் புள் இடைதட்பப்
பதன் அன்று புக்குத்திறன் அன்று மொழியிவறிது
பெயர்யகுனர் அல்லர்மலையமான் திருமுடிக்
காரியை நாடிய புலவர்

பக் 117

தீட்சை'நோக்குக்கு உ-ம்: ஆழ்வார்கள். இச்சித்த தெய்வத்தை அநுபவிப்போர். அதில் சுவை. அதில் ஆழ் கிறவர்கள். முல்லைத்திணை (இருத்தல்) இச்சித்த தெய் வத்துக்கூடாகவே அருள் வருமென்றியிருப்பவர்கள். அரு ளுக்கு அத்தெய்வம் மாறின்மை கண்டவர்கள். அத் தெய்வத்துக்கூடாக அருள் கைகூடும். நம்மாழ்வார் ஞானத்தை அடைந்தவர். கச்சியப்பர் அப்படிப்பட்டவர். அருணகிரிநாதர் அவ்வழியில் அருள் கைவந்தவர். இது

---

சுவீடன் நாட்டு விநாயகர் கோவில் பற்றிய ஆங்கில நூலில் இந்த 4 வகைக் கோவில் பற்றிய விளக்கம் உண்டு. 'God as a Remover of Obtacles, Pp. 206 - 207"

தான், பக்தியோக நெறி. பூரண தீட்சையில் இது கைகூடும். (வாலாயம் பண்ணுகிறது பக்தியன்று)

பக் 120

கச்சியப்பர் காலம் (கஷ்டகாலம்): ஆகம வரலாறுகள் சொல்லக் கூடியவர்கள் இருக்கலாம். "சுத்தவாதுளம்" என்பதில் அடை சிந்திக்க வேண்டியது.

10.9.51 பக் 160

**உபதேசகாண்டக் கதைகள்**

அபுத்திபூர்வமானவைகள். கதையில் வரும் அவர் களுக்கே தம் விளைவு தோன்றாது. சூக்குமமாய் அடிப் படையிற் கிடந்த இசைவு பிறகுதான் தெரியும். இந்தக் கதைகள் சாதகத்துக்குரியவைகள் அல்ல. அதனால், கச்சியப்ப சுவாமிகள் பாடாமல் விட்டிருக்கலாம். அன்றி, அப்பாத்திரங்களுக்கு அடிப்படையிற் கிடந்த இசை வைக் காட்டுதல், கஷ்டமும் ஆகலாம்.

பக் 171

ஔவை - சுந்தரர் - சேரமானுக்குப் பிறகு, கச்சியப்பர் அருணகிரிநாதர் இருவரைச் சொல்லலாம். (அகங்கார விருத்தியில் 6ம் தளமான ஞானம் பெற்றவர்கள்)

பக் 183

உபதேசம் பெற்றவர் கச்சியப்பர் : மெய்கண்டார் 2000 வருஷத்தில் தீட்சை பெற்றவராகலாம். பிரமநிலை யிற் குரு, அர்த்தத்தைக் கண்டவர்களுக்கு "இவன் பிரமமாகட்டும்" என்று ஆசீர்வதிப்பர். சுப்பிரமணியர் கச்சியப் பருக்குக் குரு. (தீட்சை பெற்றவர்) பரம்பரையில் வந்த சாஸ்திர தீட்சை 'நடந்தது. பரஞ்சோதியார், சிவஞான போதம் சித்திக்கட்டும் என்று சாஸ்திர தீட்சை செய்தார். படித்தது பொல்லாப் பிள்ளையாரிடம்.

(தீட்சிதர் : கச்சியப்பர், மெய்கண்டார்.
சாதி: அருணந்திசிவம், கச்சியப்பர் (ஆதி சைவர்)

பக் 185

இஷ்ட தெய்வ உபாசனையால் யோக சித்தி உண்டாகும். கச்சியப்பருக்கு அதுவும் சித்தியாகலாம். ஞான பூசை முற்றினவர். நின்ற தளம் தர்மம் ஆகலாம் - சாதகத்தால் வந்த சாதியாலும் உயர்ந்தவர்.

நூல் - மெய்கண்டார் (சத் தெரிந்தவர்) கச்சியப்பர் சித்தாந்தம் தெரிந்தவர் சுப்பிரமணியரைத் தெரிந்தவர். மராட்டியச் சோழர்[1] கோயில் கட்டத் தொடங்கிய காலம் ஆகையால் ஆகம ரகசியம் தெரியலாம்.
சூதர் போன்ற பரம்பரையில் கேட்டிருப்பர்.

1 பழைய சோழர் பரம்பரை அழிந்து வெங்கிச்சோழர் (பெண் வழி) தமிழகத்தை ஆள வந்தபோது ஏற்பட்ட பரம்பரையை மராட்டி யச் சோழர் என கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

✡✡✡✡✡

கி.மு 8ம் நூற். சோழ வம்சம் அழிவு
கி.மு 7ம் நூற். சங்கம் அழிவு வள்ளுவர்
கி.மு 6ம் நூற். மாணிக்கவாசகர் பாண்டியர் அழிவு
கி.மு 5ம் நூற். சேர வம்சம் அழிவு சுந்தரர் ஒளவையார்

விளக்கம்

நவீன ஆய்வாளர் கூறும் காலஆராய்ச்சி 19 தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயரின் ஊகத்துக் இடமான முடிவுகளே. அவற்றை நம் மரபுவழிச் சிந்தனையாளர் ஒப்புக்கொள்ளமாட்டார்.

பக் 195

பத்தியோகம் - இட்டதெய்வம்
கச்சியப்பர் - அருணகிரிநாதர்
யோகமாக முற்றுப்பெறாமலிருக்கலாம் -
யோகமாக முற்றினவர் கிளிபதம் சொல்வார்கள்.

முற்றினால் தான் பெரியவர் என்பது வித்தகக் கந்தையா* தியறி (Theory)

கச்சியப்பர் - சந்தானாசாரியர் சித்தாந்தம் தெரிந்தவர்

தாயுமானவர், நாவலர்: பண்பாடு தளம் ; உயர்சாதிமான்கள்.

1. சத்தி*
2. வாகனம் – "உணர்வு கொண்டு ஒழுகிநின்ற சூர்திகி மஞ்ஞை ஏறி" (முருகனுக்கு சூரன் வாகனமானான்.
2. அஸ்திரம் - அஸ்திர தேவர் என வழிபாட்டுக்குரியவர் இருந்தோம்பி இல் வாழ்வது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு - குறள்

* பெண் - 1 மலையரசனுக்கு மகளாய்ப் பிறந்த தேவி யார் தவஞ் செய்து ஸ்ரீகண்டபரமேசுவரனுக்குப் பெண் (சக்தி) ஆனார்.

1. வள்ளி தேவயானை தவம் செய்து முருகனுக்குப் பெண் ஆயினர்

பெண் (சக்தியார்) தற்போதமின்றி சிவபோதமே (ஞானமே) தன் போதமாயிருப்பது போதசுத்தி

**துனி இன்மை கறள் இன்மை**

துனியில் காட்சி என்ற சொற்றொடர் நக்கீரரின் அரும் வாக்கு. முனிவர்கள் துனி இல்லாத பார்வையை உடையவர்கள். கறள் கொடியது அது ஒருவரின் பார்வையை மறைக்கும். (இலக்கியச் சான்று:) விசுவாமித்திரர் வேத நெறிக்கு மாறாக தாடகை என்ற பெண் மீது பாணம் விடும்படி ராமனை ஏவுகிறார். ராமன் ஒருகணம் தயங்குகிறான். முனிவர் "சீறி நின்று இது செப்புகின்றிலேன்" அதாவது, "கோபித்து, முன்வைத்த கறள் காரணமாக இக்கொடும் செயலை செய்யும்படி உன்னை ஏவவில்லை" என்கிறார்.

---

* புதுச்சேரியிலிருந்து வெளிவந்த "வித்தகம்" என்ற சஞ்சிகை யின் ஆசிரியர், கோப்பாயைச் சேர்ந்தவர், சுவாமி விபுலானந் தருக்கு கொழும்பில் தமிழ் கற்பித்தவர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சிலகாலம் இவரிடம் படித்தாராம். இவர் பற்றிய ஆய்வு நூலை கோப்பாய் கலாமதி பாலகிருஷ்ணன் எம். ஏ. (சைவசித்தாந்தம்) சமர்ப்பித்தார் (2009)

## பஞ்சகன்னிகைகள்

**அவறல்யா த்ரௌபதீ சீதா தாரா மந்தோதரீ ததா**

**பஞ்சகன்யாம் ஸ்மரே(த்) நித்யம் மஹாபாத்க நாஸனம்**

அகலியை, திரௌபதி, சீதை, தாரை (வியாழ பகவானின் மனைவி, மந்டோதரி, ஆகிய இக்கலி காலத்தில் வள்ளல்களையும் கற் புடைய மகளிரையுமே தாம் வழிபட முடியும்

தெய்வங்களைக் காணவோ, வழிபடவோ முடியாது என்று இரத்தினசபாபதி உபாத்தியாயர் குறிப்பிடுவதுண்டாம். பொ.கையும் இதனை வற்புறுத்துவார். இக்கருத்தை வைத்து சி. கணபதிப் பிள்ளை எழுதிய கட்டுரை "கலைமகள்" பொங்கல் மலர் ஒன்றில் பிரசுரமாயிற்று. பண்டிதமணி அவர்களது மாணவன் சம்பந்தன் இக் கருத்தால் தூண்டப்பட்டே தமது சில சிறுகதைகளை எழுதினார். "தர்மவதிகள்"

இதிகாசபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்வறயேத் ஸ்ரீ இதிகாச புராணங் கொண்டு வேதத்தை உபப் பிருங்கணம் செய்ய வேண்டும். அற்பகேள்வியுடையான் தனக்குத் தீங்குவிளைப்பான் என்று வேதமாதா நடுங் கின்றாள். (மகாபாரதம் ஆதிபர்வம் 1.264.265)

"பஞ்சகன்னிகைகள்" பற்றிய ஆய்வை மீனலோஜினி பாரதி எம். ஏ. (தமிழ்) ஆய்வுக் கட்டுரையாகச் சமர்ப்பித்துள்ளார் (2011)

# 9 கைலாசபதியவர்கள் எடுத்துக் காட்டிய தேவாரங்கள்

1. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட்டைம் மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள் செய்வான மருங்கோயில்
வலம் வந்த மடவார் கணடமாட
முழ வதிர மழையென்றஞ்சிச்
சில மந்தி யமலந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே.
- திருஞானசம்பந்தர்

"முழவதிர மந்தி முகில் பார்க்கும்"

மயில் குயில் குண அமைதி இருந்தபடி காண்டல் தெய்வ சங்கற்பம் காண்டலுமாம். குணபூரணத்துவங் காண்டல் ஞானம். அன்பின் "குணபூரணத்துவங் காண் டல் ஞானம்."

பொருள் கண்டவர்களே அருட்குணம் குயில் மயில் களில் நடந்து கொண்டிருப்பதைக் காணவல்லவர்கள்.

விளக்கம் :

"எல்லா உலகமும் ஆனாய் நீயே" "ஆதல்" எந்த மூலத்தி லிருந்து ஆரம்பிக்கிறது? "மூவகையுலகும் முகிழ்த்த" மூலம் எது? அதைக் காணும் காட்சி பெற்றவரே "வலம் வந்த மடவார்கள் நடமாட முழவு அதிர மழையென்று அஞ்சி" என்பன போன்ற நாயன் மாரின் இயற்கை வருணனைகளை விளங்கக் கூடியவர்கள். "காக் கைச் சிறகினிலே நந்தலாலா" பாடிய பாரதியும் சம்பந்தரும் ஒரே நிலையினர் அல்லர்.

2. துறக்குமா சொலப் படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமாறிலாத என்னை மையல் செய்(து) இம் மண்
ணின் மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு விட்டு
இறக்குமாறு காட்டினாய்க்(கு) இழுக்குகின்ற(து)
என்னையே.
(சம்பந்தர் தேவாரம்) (2532)

3. மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல்ல.'. துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததே.

4. பாடல் வீணையர் பலபல சரிதையரெருது உகைத்
தரு நட்டம்
ஆடல் பேணு வரமரர்கள் வேண்டநஞ்சுண்டிருள்
கண்டத்தார்
ஈடமாவது விருங்கடற் கரையினி லெழிறிகழ்
மாதோட்டம்
கேடிலாத கேதீச்சரந்தொழுதெழக் கெடுமிடர்
வினைதானே.
(சம்பந்தர் தேவாரம்)

5. பரசு பாணியர் பாடல் வீணையர் பட்டினத்துறை
பல்லவனீச்சரத்
தரசு பேணி நின்றாரிவர் தன்மையறிவாரார்.

6. அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான் படப் பாலதொன்றானால்.
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப் பனாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்று நான் அறியேன் மறுமாற்றம்.
ஒழுக்க என் கணுக்கு ஒரு மருந்து உரையாய்
ஒற்றி யூர் எனும் ஊர் உறைவானே.
(சுந்தரர் தேவாரம்)

7. மீளா அடிமை உனக்கே ஆளாய்ப் பிறரை
வேண்டாதே
மூளாத்தீப் போல் உள்ளே கனன்று முகத்தால்
மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல்
சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந் போதீரே.
(சுந்தரர் தேவாரம்)

**கைலாசபதியவர்கள் எடுத்துக் காட்டிய திருவாசகங்கள்**

1. உலவாக் காலந் தவம்எய்தி
உறுப்பும் வெறுத்திங்குனைக் காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை இது மாய்க்க மாட்டேன்
மணியே, உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன் என்கொண்டெழுகேன்
எம்மானே.
(திருச்சதகம் 54)

2. காணும் ஆறு காணேன் உன்னை
அந்நாட் கண்டேனும்
பாணே பேசி என்றன்னைப்
படுத்த தென்ன? பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே
அத்தா. செத்தே போயினேன்
ஏணாணில்லா நாயினேன் என்கொண்டெழுகேன்,
எம்மானே.
(திருச்சதகம் 84)

### கைலாசபதியவர்கள் எடுத்துக்காட்டிய திருக்கோவையார்

1. காகத்து இரு கண்ணிற்கு ஒன்றே மணி கலந்தாங்கு இருவர்
ஆகத்துள் ஓர் உயிர் கண்டனம் யாம் இன்று யாவையும் ஆம்
ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பலவன் மலையில்
றோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்பத்துன்பங்களே.

2. காரணி கற்பகம் கற்றவர் நற்றுனை பாணர் ஒக்கல்
சீரணி சிந்தாமணி அணிதில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தம் சங்க நிதி விதிசேர்
ஊருணி உற்றவர்க்கு ஊரன்மற்று யாவர்க்கும் ஊதியமே.

1.4.1952 பக் 241

### நாவலர் பற்றி கைலாசபதி

